பத்திரக்கிரயம்

[illegible]
[illegible] ரூபா 5.00 [illegible] 9.00
[illegible] 8.00 [illegible] 12.00
[illegible] 9.00 [illegible] 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினாலன்றிக்
கவனிக்கப்பட மாட்டா

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1935

உ
சிவமயம்

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூச வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே.

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
[illegible] ரூபா 10.00 [illegible] ரூபா 5.00
[illegible] ரூபா 4.00 ஓர் அங்குலம் ரூபா 1.00
அடுத்த முறைகட்கு மேற்படி
விகிதங்களிற் பாதி

[illegible]

விரோதி வருஷம் (1889 ஆவணி மாதம்
28-ந் திகதி ஆரம்பமானது

[புத்தகம் — ருக]

யாழ்ப்பாணம்:— பிரமாதி ஞு மாசி மீ கஙஉ (1940 பெப்ரவரி 29 வியாழக்கிழமை)

[இலக்கம் அஎ]

"குருலிங்கசங்கமம்"

[இது சென்ற மார்கழி மாசம் (1940 ஜனவரி 4-ம், 5-ம்,6-ம் தேதிகளில்) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்திற் கூடிய அகில இலங்கைச் சைவமகாநாட்டில், திக்கம் திரு. சி. செல்லையாபிள்ளை அவர்கள் செய்த பிரசங்கமாகும்.]

(முற்றொடர்)

சங்கமம்

அடியார் திருமேனி அசைவுடைதாதலின் சங்கமம் எனப்பட்டது. "நடமாடுங் கோயில்" எனவும், "பராவுசிவர்" எனவுங் கூறப்படுவதும் அதுவேயாம். பராவுதல் சஞ்சரித்தல். சிவபிரானிடத்து இடையறு அன்பு செய்து, அவருடைய திருவடிகளை அணையவொட்டாது தடுத்தற்குக் காரணமாகிய இயல்பினையுடைய மலசம்பந்தங்களைக் களைந்த மெய்யுணர்வினையுடைய பெரியோர், தம்முடன் இணங்குவோர்களை உயிர்க்குயிராம் பிரானை மறப்பித்துத் தீநெறிக்கட் செலுத்திப் பிறவிக்குழியில் வீழ்த்தித் தயருறுத்தும் அஞ்ஞானிகளோடு சிறிதும் இணங்காதொழிந்து, தம்முடன் இணங்குவோரைச் சிவபிரானிடத்து அன்பை விளைவித்து நன்னெறிக்கட் செலுத்திப் பிறவிக்குழியில் நின்றும் எடுத்து வாழ்விக்கும் மெய்ஞ்ஞானிகளாகிய சிவனடியார்களோடுகூடி, அவர்கள் திருவேடத்தைச் சிவன் என்றே பாவித்து வணங்குவார்கள். எல்லாப்பெருங் கேட்டிற்கும் மூலமாய் வரும் பிராரத்த வினையானது இச் சிவனடியார்களை வாதிக்கமாட்டாது.

"மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை யகற்றிப்
பத்த ரினத்தாராய்ப் பாலுணர்வி னுணருப
மெய்த்தவரை மேவா வினை"

எனவும்,

"மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
அரனெனத் தொழுமே"

எனவும் சிவஞானபோதங் கூறுவது காண்க.

சிவனடியாரது திருவேடத்தின் பொலிவை,

"தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும்
நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயுமுடையார் புகுந்
தனர் வீதியுள்ளே".

என்பதனுலுணர்க.

இன்னும், அறிவிச்சை செயல்கள் ஒரு வழிப்பட்டுச் சிவபிரானிடத்து அயரா அன்புசெய்த அறுபான்மும்மை நாயன்மாரும் அவர் போன்ற பெருஞானிகளும் தமது திருமேனியே கோயிலாகவும், புலன் வழிச் செல்லாது அடங்கிய மனமே அடிமையாகவும், உண்மை ஞானமே பஞ்சசுத்தியாகவும், ஆன்மசைதன்னியமே இலிங்கமாகவும், அன்பே நெய் பால் ஆதிய அபிடேகதிரவியங்களாகவும், துதியே அவியாகவுங்கொண்டு எப்பொழுதும் இடையறாத ஞானபூசை செய்பவராதலானும் அப்பெற்றியராய பரமஞானிகளது திருமேனியையே இடமாகக்கொண்டு சிவபிரான் குருவாக எழுந்தருளி ஞானோபதேசஞ் செய்து ஆட்கொண்டருளுவராதலானும் அடியாரது திருக்கூட்டத்தின் சேவையே குருசேவையும் இலிங்கசேவையுமாயவாறுங் காண்க. இதனை,

"காயமே கோயிலாகக் கடிமன
மடிமையாக
வாய்மையே தூய்மையாக மன
மணி லிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறைய
நீர் அமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக்
காட்டினோமே.',

என்பதனுலுமுணர்க.

சிவனடியாரிடத்துப் பத்தியில்லாதவர் சிவனிடத்தும் பத்தியில்லாதவரே. சிவனடியாரை அவமதித்துச் சிவலிங்கபூசை செய்தலாற் பயனில்லை என்பது சிவாகம நூற்றுணிபு. சிவனடியாரிடத்து அன்பில்லாதவழி மாசனுமலந் தாக்கும். அதன் வழியாக மலபந்தஞ் சேரும். ஆதலால் அடியாரைச் சார்ந்து அவரைச் சேவித்தல் இன்றியமையாததாம். இன்னும் பரசிவமாயினும் எங்கணும் வியாபகமாய் நிற்பினும் பத்தரது திருவேடத்திலும் சிவலிங்கத்திலும் தயிரில் நெய்போல விளங்க நின்றுபெற்ற, அல்லாவிடத்துப் பாலின் நெய்போல வெளிப்படாது நிற்றலால் அவரை வழிபடுதல் அத்தியாவசியமாம் என்னை?

"தன்னுணர வேண்டித் தனதுரு
வைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருந்தலால்
தன்னுணரும்
நேசத்தர் தம்பால் நிகழுந் ததிநெய்
போற்
பாசத்தார்க் கின்றும் பதி"

என்ப வாகலின்.

இவை அனைத்தையும் நன்குணர்ந்தே தஞ்செயலற்று அருள் வழி நின்ற சிவன் முதலாகிய விறன்மிண்டநாயனுர் சிவனடியாரையுஞ் சிவலிங்கத்தையும் சிவனெனவே வழிபட்டனர். இதனாலன்றே இவர் தேவாசிரிய மண்டபத்தில எழுந்தருளியிருந்த சிவனடியாரை வழிபடாது சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளை அவரைவலிய ஆட்கொண்ட பரமசிவனையும் அடியார் திருக்கூட்டத்துக்குப் புறகு என்றார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகை பாடியபின் அடியார் திருக்கூட்டத்தற்கு உள் என்றும் அருளிச் செய்தார். அவர் அருள் வழியிலே நின்ற பெரியாரதலின அவர்வாக்குச் சிவவாக்கேயாம். ஆதலின் அவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வலிய ஆட்கொண்ட பிரானும் அடியார் கூட்டத்துக்குப் புறகு என்றதனுல குற்றம் வருது சிவதோத்திரமாயவாறு காண்க. இது, சண்டேசுர நாயனுரது கொலைப் பாதகம் சிவச்செயலாய்ச் சிவபுண்ணியமாயவாறு போலாம். இதனை,

"ஒருவர் தீதுக்கும் வன்றொண்
டன் புறகென் றுரைப்பச் சிவனரு
ளால்
பெருகா நின்ற பெரும்பேறு பெற்
ருர்........" என்பதனுலும்,
.............................பிறைக்குடிப்
புனல்சூழ் வேணிப் புனிதர்க்கும் புற
கென் றுரைக்க மற்றவர்பால்
கோளுமருளைப் பெற்ருர்மற் றினி
யார் பெருமை கூறவலார்"

என்பதனுலும் தெளிக. பரமகுரு நிதியாகிய சிவமே தமது அடியாரிணக்கம் இல்வழிப் பிறவிப் பெருங்கடலை நீந்தி முத்திப் பெருங் கரையைச் சேர்தல் இயலாதென பதனைச் சர்வான்மாக்களும் உணர்ந்துய்வான் திருவுள்ளங் கொண்டு விறன்மிண்ட நாயனுரை ஆவேசித்துச் சுந்தரமூர்த்தி நாயனுரையும் தம்மையும் அடியார் கூட்டத்துக்குப் புறகு எனத் திருவாய் மலர்ந்தருளிப் பின்னர் அதன்பயனாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளை அதிட்டித்து நின்று திருத்தொண்டத்தொகை பாடப்பெற்றதாயின அடியார் பெருமை எவ்வாறு கூறப்படுந்தகைத்து. ஒருவாரானுமின்று. இன்னும் மாணிக்கவாசக சுவாமிகள்

"தேவர்கோ வறியாத தேவதேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத்
தழிக்குமற்றை
மூவர்கோ னய்நின்ற முதல்வன்
மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத்
தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு
கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது
மஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு
வோமே"

எனவும்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

சம்னர் வெல்ஸிடம் இந்திய தூதுக்கோஷ்டி?

பெண்ணின் பெருமை

அஹிம்ஸையின் அவதாரம்

துன்பம்தாங்கும் ஆற்றல்

பெண்மக்களின் பெருமையைப் பற்றி மகாத்மா எழுதியுள்ள ஒரு வியாசத்தில், ஆண்மக்கள் பெண்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதுவதும் அவர்களை வேறு துறையில் இடம்பெறுத்துவதும் கூடாதென விளக்கியிருக்கிருர்.

பம்பாய், பெப் 24

மகாத்மா இன்று பெண்களின் கடமை என்பதுபற்றி ஹரிஜனில் ஒரு வியாசம் எழுதியிருக்கிருர்.

'பெண்கள் வீட்டை விட்டு வெளிச் சென்று அவ்வீட்டைக் காக்கும் வேலையை விறக்க வேண்டுமென நினைப்பதும் அவ்வேலையைச் செய்யத் தூண்டுவதும் கேவலம்" என மகாத்மா அவ்வியாஸத்தில் குறிப்பிட்டிருக்கிருர்.

ஒரு ஸ்திரீ தங்கள் வர்க்கத்தினிடமுள்ள அற்ப குணங்கள் போவதற்கான வழியைக் காட்டும்படி காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதினர். அதற்கு மகாத்மா பின்வருமாறு பதில் எழுதியிருக்கிருர்.

"ஆணும் [illegible] பெண்ணுக்கும் ஆத்மா ஒன்றே, அவர்களின் உணர்ச்சியும் ஒரே மாதிரியாகவிருக்கிறது. ஒருவர்க்கொருவர் அவர்கள் உதவி செய்து கொள்ளாது இவ்வுலகில் வாழமுடியாது.

ஆண்கள் அதிகமாக ஆதிக்கம் வகிக்க ஆரம்பித்துப் பெண்கள் தங்களுக்குத் தாழ்ந்தவர்கள் என எண்ணி வருகிருர்கள். ஆனல், பெண்ணின் பெருமையைப் பெரியவர்கள் பெரிதும் பாராட்டியே இருக்கிருர்கள். அவர்களின் உணர்ச்சியும் ஆத்மாவும் ஒரே மாதிரியாக விருந்தாலும் பிரதானமான காரியங்களில் வித்தியாசமிருக்கின்றது. ஆகவே, அவர்களின் தொழில் மாறுபட்டு நிற்கிறது.

குழந்தைகளை வளர்ப்பது பெண்களின் பிரதான தொழிலாக விருக்கிறது. அவர்கள் இல்லையானல் சமூகமே அழிந்துவிடும். ஆகவே அவர்களை வீட்டைவிட்டு வெளிப்படுத்தி அந்த வீட்டைக் காக்க ஆயுதந் தாங்கும்படி செய்வதும் அவர்களை அத் துறையில் தூண்டுவதும் மிக்க கேவலமாகும். அவ்விதம் செய்வது நாகரீகமற்ற காரியமுமாகும். அதோடு கேடு அடைவதற்கும் அது ஒரு வழியாகும். ஆண்கள் செய்யவேண்டிய காரியத்தைப் பெண்மக்கள் செய்ய முற்பட்டால் அவர்கள் தாங்கள் கெட்டுமன்றி ஆண்மக்களையும் துன்பத்துள் ஆழ்த்திவிடுவார்கள். பெண் பிள்ளைகளுக்கேற்ற காரியத்தினின்றும் அவர்களை விலக்கி வைக்கும் பாவம் ஆண்மக்களையே சேரும்.

அவரவர்கள் தங்கள் தங்கள் வீடுகளை நல்ல நிலையில் வைத்துப் பிறர்திருப்புக இடம் தராமலிருப்பதே வீரமாகும்.

அஹிம்சையின் அவதாரம்

ஸ்திரீகள் அஹிம்சையின் அவதாரமாகும். அஹிம்சையே உருக்கொண்டவர்கள் அவர்கள். அஹிம்சையென்பது அளவற்ற அன்பைத்தான் குறிக்கிறது. அதன் மூலம் துன்பங்களைத் தாங்கும் ஆற்றலும் ஏற்படுகிறது.

ஆண்மக்கள் பலருக்கும் தாய்மார்களாக விளங்கும் ஸ்திரீகளிடம் தான் இத்தன்மை அதிகமாகக் காணப்படுகின்றது.

கருத்தரித்து ஒன்பது மாதங்கள் [illegible] குழந்தையைத் தாங்கி அதனை ஆதரித்து வருகிருர்கள். தாய் பிரசவகாலத்திற் படும் வேதனையே சொல்லிமுடியாது. ஆனல், குழந்தை பிறக்கப்போகிறதென்ற சந்தோஷத்தால்தான் அந்தக் கஷ்டத்தை மறந்து நிற்கிருள். பிரசவித்தபின், தன் குழந்தை நாளொரு மேனியாக வளர எத்தனையோ தொல்லைகளைத் தாங்குகிருள். இந்த அன்பை மக்கள் பலரிடத்தும் அவள் காட்டவேண்டும்.

ஆண்மக்களின் மிருக இச்சையைத் தீர்க்கப் பிறந்த ஒரு கருவியாக அவள் தன்னைக் கருதக்கூடாது. அப்போதுதான் அவள் தாய்க்குத் தாயாகவும் தலைவருக்குத் தலைவராகவும் பெருமைமிக்க ஒரு அந்தஸ்தை அடைவாள்.

உலகம் சமாதானத்தையே வேண்டி நிற்கின்றது. கிடைத்தற்கரிய அந்த அமுதத்தை இவ்வுலகம் உண்டு உய்யப் பெண்மக்கள் தான் வழிகாட்டவேண்டும். அப்போது சத்தியாக்கிரஹத் தலைவிகளாக அவர்கள் விளங்கலாம். புத்தகங்களைப் படித்து இந்தப் பதவியைப் பெறமுடியாது. துன்பங்களைத் தாங்குவதாலும் நம்பிக்கை கொள்வதாலும் கொஞ்சம் உறுதி பெறவேண்டும்.

'நேர்ஸ்'சொன்ன கதை

புனு சாருன் ஆஸ்பத்திரியில் எனக்குச் சிகிச்சை செய்த 'நேர்ஸ்' ஒரு ஸ்திரீயைப்பற்றி ஒருநாள் சொன்னகதை எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது. கர்ப்பவதி ஒருத்தி தன் வயிற்றிலுள்ள குழந்தைக்கு ஏதேனும் அபாயம் நேருமோ என அஞ்சித் தன் சிகிச்சைக்கு மயக்கமருந்து (குளோரபோம்) கொள்ள மறுத்தாளாம். ஆதலால் அவள் மிக்க அவஸ்தையுடன் சிகிச்சையைக் [illegible]. வயிற்றிலுள்ள குழந்தை எவ்விதத்திலும் துன்பப்படக் கூடாதென்ற ஒரே நோக்கம்தான் அவளுக்கிருந்தது. அதற்காக அவள் எவ்வித வேதனையையும் தாங்கத் தயாராக விருந்தாள்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

ரூஸ்வெல்டிற்கு இந்திய சுயராஜ்ய சங்கக் கடிதம்

ஸ்திரமான சமாதானம் நிலைபெற வேண்டுமேல் இந்தியா சுதந்தரம்பெறல் வேண்டும்

லண்டன், பெப் 23

இந்தியசுயராஜ்யசங்கம் லண்டன் அமெரிக்க தூதர் காரியாலயத்தின் மூலம் இன்று அமெரிக்க ஜனாதிபதியாகிய மிஸ்டர் ரூஸ்வெல்டிற்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறது. அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது:- லண்டனுக்கு மிஸ்டர் சம்னர்வெல்ஸ் வரும்போது அவர் இந்திய தூதுக்கோஷ்டி ஒன்றை வரவேற்றுப் பேசவேண்டுமென்று நாங்கள் யோசனை கூறுகிறோம். இந்தியாவுக்கு அதன் சுதந்தரம் திரும்பக் கிடைத்தாலொழிய எந்தச்சமாதான உடன்படிக்கை நிரந்தரமாக நிலைத்திருக்க முடியாதென்று இச் சங்கம் அபிப்பிராயப்படுகிறது.

ஹிட்லர் - வெல்ஸ் சந்திப்பு ஏற்பாடு

லண்டன், பெப் 24

நியூயோர்க் ரேடியோ தெரிவிப்பதாவது:- மிஸ்டர் சம்னர்வெல்ஸ் பேர்லினுக்குவிஜயஞ்செய்யும்போது ஹிட்லரைக் [illegible] ரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹிட்லர்-வெல்ஸ் சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதற்காக அமெரிக்க தூதர் பேர்லினிலுள்ள அந்நியமந்திரி காரியாலயத்திற்கு வந்திருந்தார். மிஸ்டர் வெல்ஸ் செவ்வாயன்று, பேர்லின் சேருவார். அன்று அவர் வான் ரிப்பன்டிராபைக் கண்டு பேசுவார்.

இந்தியாவுக்கு உண்மைச் சுயராஜ்யம்

வகுப்புத்தீர்ப்பு இருக்கும் வரை கிட்டாது

காந்திஜி ஹரிஜனில்எழுதுவது

பம்பாய், பெப் 24

"வகுப்புத் தீர்ப்பு" என்ற தலைப்புடன் மகாத்மாகாந்தி இன்றைய "ஹரிஜன்" பத்திரிகையில் எழுதியிருக்கும் கட்டுரையில் வகுப்புத் தீர்ப்பு நடைமுறையிருக்கும்வரை இந்தியாவுக்கு உண்மையான சுயராஜ்யம் கிட்டப்போவதில்லையென்று அபிப்பிராயந் தெரிவித்திருக்கிருர்.

பிரிட்டிஷ் ஆதிக்கம் பலமடைவதற்கே

வகுப்புத்தீர்ப்புச் சம்பந்தமாக மகாத்மாகாந்தியோ அல்லது காங்கிரஸோ இதுவரை திட்டமான அபிப்பிராயம் எதுவும் கூறவில்லையென்று சமீபத்தில் வங்காளத்திற் குறைகூறப்பட்டதை ஆக்ஷேபித்து மகாத்மாகாந்தி தமது கட்டுரையிற் குறிப்பிட்டிருப்பதாவது:-

"நம்மீது சுமத்தப்பட்டிருக்கும் ஒரு விஷயத்தை நம்மால் அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது. இந்த வகுப்புத்தீர்ப்பு இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கம் பலமடைவதற்காகவே இந்தியாவிற் புகுத்தப்பட்டிருக்கிறது".

மாற்றுவதற்கு மார்க்கம்

"பிரிட்டிஷாரைத் தவிர, இந்தியாவிலுள்ள வேறு எந்தக் கட்சிக்கும் இந்த வகுப்புத்தீர்ப்பு நன்மை பயக்கவில்லை. அதை மாற்றவேண்டுமானல், கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படவேண்டும்.

தான் இழைத்த தவறை உணர்ந்து அதற்குப் பரிகாரமாகப் பிரிதானிய அரசாங்கத்தார் இந்த வகுப்புத் தீர்ப்பை மாற்றலாம் அல்லது வெற்றிகரமாக நடத்தப்படும் புரட்சியின் மூலமும் அதை மாற்ற முடியும்.

பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலமும் இத் தீர்ப்பை மாற்றமுடியும். ஆயின், இவ்விஷயத்தில் இந்துக்களும் முஸ்லீம்களும் சம்மதித்துப் போய்விட்டாலும், வகுப்புத்தீர்ப்பை இந்த முறையில் மாற்றுவது அசாத்தியமென்றே தோன்றுகின்றது. ஏனெனில், ஐரோப்பியர்களும் இதற்குச் சம்மதிக்கவேண்டியதாக இருக்கிறது. அப்படிச் செய்யவேண்டுமானல், அவர்கள் சொந்த நலன்களைத் துறக்கும் தியாகத்திற்குச் சம்மதிக்கவேண்டும். இது அரசியல் துறையில் இதுவரை நடக்காத சம்பவமாகும்.

சட்டசபைக்குச் செல்லவேண்டாம்

நாட்டிற் பல பிரதான வேலைக ளிருக்கின்றன

டில்லி, பெப், 21

மௌலானு அபுல்கலாம் டில்லியைவிட்டுப் புறப்படுமுன், காங்கிரஸ் தலைவர்கள் பலரைக் கண்டு பேசினர். இந்த நெருக்கடியில் வித்தியாசங்களையெல்லாம் விட்டொழிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இந்தியா சட்டசபையில் உள்ள முஸ்லீம் அங்கத்தினர் சிலரையும் அவர் ஜனுப் அஸப் அலி வீட்டிற் சந்தித்துப் பேசினர். அசோஸியேட்டட் பிரஸ் நிருபர் ஒருவர் அவரைக் கண்டு பேசிய போது அவர் "இந்தியா சட்டசபை அங்கத்தினர்கள் இக் கூட்டத்துக்குப் போகக் கூடாதெனச் செய்யப்பட்ட முடிவை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். அவர்கள் நாட்டிற் கவனிக்கவேண்டிய இன்னும் பல பிரதான வேலைகளிருக்கின்றன" என்ருர்.

ஐந்தொழில்

"ஆரும் அறியாத அண்டத்
[திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடந்து
[லே
நீரினிற் பால்போல நிற்கின்ற
[நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகம் அறிந்
[தேனே"

சைவ சித்தாந்தத்தின்படி கடவுள், உயிர், தளை என்னும் மூன்று பொருள்களும் எக்காலத்தும் உள்ளன என்று தடைவிடைகளான் சித்தாந்த முடிவுகட்டப்பட்டிருக்கின்றது. உயிர்கள் தளையினின்றும் நீங்கி இறைவனின் திருவடிப் பேறுகிய பேரின்பத்தை அடையுமாறு அவ்விறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கின்றுன். இவ்வைந் தொழில்களும் மறைத்தல் காத்தலினும் அருளல் அழித்தலினும் அடங்கி முத்தொழில் என்றும் கூறப்படும்.

இவ்வைந் தொழில்களும் உயிர்களின் பொருட்டு அதாவது உயிர்களைத் துன்பத்திற்கேதுவான பிறவிக் கடலினின்றும் எடுத்து நிலைபெறுகிய பேரின்பத்திற் கேதுவான முத்திக்கரையிற் சேர்ப்பிக்கும்பொருட்டு - உயிர்களின் மாட்டும் உடல் உலகங்களாகிய தளையின் (பாசத்தின்) மாட்டும் நிகழ்வன. அவற்றுள் படைத்தல் காத்தல் அழித்தல் மூன்று தளையின் மாட்டும் மறைத்தல் அருளலாகிய ஏனைய இரண்டு உயிர்களின் மாட்டும் நிகழ்வனவாம்.

இவை இறைவன் உயிர்கள்மேல் வைத்த பேரருளாற் செய்யப்படுவன வாகலின் அருட்செயல்களாம். இத்தொழில்கள் ஐந்தும் இறைவனது மெய்த்தொழில்களாகும். இவை இறைவனுக்கு அரியன வல்ல என்பதைக் "காத்தும படைத்துங் கரந்தும் விளையாடி" என்னும் மணிவாசகம் வலியுறுத்தா நிற்கும். விளையாட்டெனின் சிறுமகார்களின் விளையாட்டைப்போல பயனில் செயலோ அன்றித் தன் பொருட்டுத் தான் செய்யுஞ் செயலோ என்னும் ஐயம் நிகழாமைப் பொருட்டு "ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகையெலாம் உய்ந்தொழிந்தோம்" என்னும் மணிவார்த்தை எழுந்தது. அதனுல் உயிர்கள் மாட்டு வைத்த பேரருளினுல், அவைகள் துன்பத்தினின்றும் நீங்கிப் பேரின்பவாழ்வடைந்து உய்யும்பொருட்டேயாம் என விளங்கும். இது சிவஞான போதத் தமிழ்ப் பேருரையின்கண் மாதவச் சிவஞான முனிவரால் தடை விடைகளால் ஆராயப்பட்டுள்ளது.

இவ்வைந்தொழில்களுள் படைத்தல் என்பது உயிர்களைத் தோற்றுவித்தல் என்பதில்லை; என்று இறைவன் உண்டோ அன்றே உயிர்கள் உள்ளன என்பது சித்தாந்த மாகலான், பின்னை என்னையோவெனின் அநாதியே ஆணவமலத்தாற் கட்டுண்டு அறியாமையிற் கிடந்த உயிர்கட்கு அவ்வாறு கட்டுண்டிருந்த காலத்து ஆணவமலச் சேட்டையால் அகத்து நிகழும் இச்சையின் வியாபாரபேதமாகிய விருப்பு வெறுப்புகளாகிய மூலகன்மத்துக்கீடாக உடலையும் கருவிகளையும் உலகங்களையும் போகங்களையும் கொடுத்தலேயாம். இது ஆணவமலம் பக்குவமாதற்பொருட்டாம். எவ்வாறெனின், ஆணவமலம் அறியாமையைச் செய்வது. அறியாமையாவது அனுதி கேவலத்தில் அறிவு இச்சை செயல்கள் தொழிற்படாது தடுக்கப்படுதல். இவ்வாறு தடை செய்யும் வலி கெடுதலே ஆணவமல பக்குவம் எனப்படும். உடலையும் கரணங்களையும் உயிர்களுக்குக் கொடுத்து அவைகளை உலகங்களில் விடுத்துக் கன்மத்துக்கீடாகப் போகங்களை நுகரச் செய்வதினுல் கன்மங்கள் நீங்கும். நீங்கவே ஆணவவலி குன்றும். ஆதலான், படைத்தல் ஆணவமல பக்குவத்தின் பொருட்டென்பது.

காத்தல் அல்லது நிலைத்தல்- உயிர்கட்குக் கொடுக்கப்பட்ட உடல் கருவி முதலியவைகளை நிலைப்படுத்துதல். இது மாயாமலம் பக்குவமாதற் பொருட்டு மாயை மயக்கத்தைச்செய்வது அதாவது ஒன்றை மற்றொன்றாக உணரச்செய்வது- "அநித்தத்தை நித்தம் என்றும் அசுத்தத்தைச் சுத்தமென்றும் துன்பத்தை இன்பம் என்றும் தானல்லாத பொருளைத் தான் என்றும்" திரியக்காணும் உணர்வாம். இவ்வாறு உணரும் உணர்ச்சியின் அறிவே மாயாமலம் பக்குவமாதல். இவ்வுணர்ச்சியின் கேடு அநுப அறிவால் உணரும் தவ்வநுபவ அறிவு இவ்வுடல்கள் நிலைத்திருந்தாலன்றி நிகழாதாகையின் காத்தல் அல்லது நிலைத்தல் மாயாமல பக்குவத்தின்பொருட்டு வேண்டப்படுவதாம்.

அழித்தல் அல்லது ஒடுக்குதல்- உயிர்களுக்குக் கொடுக்கப்பட்ட உடல் கருவி முதலியவைகளை படைத்தல காத்தல்களினாலாகிய இளைப்பினை நீக்குதலாம். நாள் முழுவதும் வேலைசெய்த ஒருவன் வேலையினாலுண்டாகிய இளைப்பை நீக்கிக்கொள்ளும்பொருட்டு இரவில் தூங்குவதுபோல, ஒருபிறவியிலே பக்குவப்பட்டு நுகரவேண்டிய வினைப்பயன்களை நுகர்ந்ததனால் உண்டாகிய இளைப்பை நீக்குதலே அழித்தல் அல்லது ஒடுக்குதலாகும்.

இது கரும மலம் பக்குவப்படும் பொருட்டாம். கருமம் என்பது நல்வினை தீவினைகள். இவைகளின் காரியம் இன்பதுன்பங்கள். இவை [illegible] பக்குவமாதல், இன்ப துன்பங்களை நெடுங்காலம் நுகர நுகர அந்நுகர்ச்சியால் அவைகளில் பற்றுச் செல்லாதாக, அதனுல் இன்பத்தினிடத்து மகிழ்ச்சியும் துன்பத்தினிடத்துத் துக்கமும் இல்லாமல் இரண்டையும் ஒப்பநோக்கலாகும். இனி இன்பதுன்ப நுகர்ச்சிக்குக் காரணமாகிய இருவினைகள் பன்னுக்கு வருகிற காலத்து அவ்வநுபவத்திற்கு ஏற்றவாறு உடல் முதலியவை மாறவேண்டும். அவ்வாறு மாற்றக் கொடுக்க வேண்டியது இறைவனது கடமை. மாற்றுங்கால் உண்டாகும் ஒடுக்கமே பக்குவமாய் இருக்கும் கன்ம பலனை அநுபவித்துத் தொலைப்பதற்கு ஏதுவாதலான், ஒடுக்கம் அல்லது அழித்தல் கன்ம மலம் பக்குவமாதற் பொருட்டாதல் என்பது.

மறைத்தல் (திரோபவம்)- உயிர்களுக்குப் பக்குவம் வரும் பொருட்டு அநுபவிக்க வேண்டுதலாகிய வினைப்பயன்களை மறைத்தும் அநுபவிக்க வேண்டியவற்றினுள்ள குணதோஷங்களை அவ்வுயிர்கட்குத் தெரியவொட்டாமல் மறைத்தும அவ்வுயிர்களை இருவினைப் பயன்களிலே நிறுத்தி அழுந்துதல். குணதோஷங்களை மறைக்கவிலையாயின் அநுபவங்கூடாது; கூடாதாயின் மும்மலங்களைக் காரியப் படுத்தியும் பயனின்ருய் முடியும்.

அருளல் (அநுக்கிரகம்)- உயிர்களுக்கு மலத்தை நீக்கி சிவத்துவத்தை அழித்தல். அதாவது, இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்தவிடத்து இதுகாறும் உண்ணின்று மலம் பக்குவம் எய்தும்படி வேண்டிய உபாயங்களைச் செய்து வந்த மறைத்தற்சத்தி (திரோதான சத்தி) திரு அருட்சத்தியாய் மாறி ஆசாரிய வடிவங்கொண்டு எழுந்தருளிவந்து தீக்கை முதலியவற்றைச் செய்து மும்மலங்களையும் நீக்கி முத்திகொடுத்தலாம்.

—சித்தாந்தம்

கவனியுங்கள்
சலவைக்கு கேரந்தியானது.
நயம் பெத்தாபுரம் ஸில்க் சால்
2¼ × 5 ஸில்க் சால் 1-க்கு ரூபா 1-4-0
டசின் 1-க்கு ரூபா 13—00 மட்டும்
3 × 8 ஸில்க்வேட்டி 1-க்கு ரூபா 3-00
டசின் ஒன்றுக்கு ரூபா 32-00
மனேஜர், கிருஷ்ணுவிலிங்பாகட்ரி,
கோட்டார் P. O. திருவிதாங்கூர்.
(Y. 183 —5-11-39 —5-11-40.)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் பிரமாதி௵ மாசி௴ ௧௭௳ வியாழக்கிழமை

மந்திரிமார் தம் பதவியை விட்டு விலகல்

இலங்கைத் தேசாதிபதிக்கும் அரசாங்கசபை மந்திரிமார்க்கு மிடையே பொலிஸ் தலைவருடைய அதிகாரத்தை விட்டு வந்த பிணக்குக் காரணமாக முந்தைநாள் அரசாங்க சபை மந்திரிமார் அத்தனை பேரும் தங்கள் பதவியிலிருந்து விலகிவிட்டனர். ஆனால் இந்த விஷயத்தில் முதன்முதல் விலகிக் கொள்ள வேண்டியவர் அரசாங்கசபைப் பிரதானியென்றிருக்கும் உண்ணாட்டு மந்திரியாகிய ஸேர். பரன் ஜெயத்திலகையாவர்; ஆயினும் அவர் விலகுவதோ விலகாமல் இருப்பதோ என்று யோசித்துக் கொண்டு நிற்பதற்கிடையில் மிஸ்ரர் டீ. எஸ். சனநாயக என்பவரே முதன்முதல் விலகிக் கொண்டார்; அவருடைய துணிவு பாராட்டத் தக்கது. அதன் பின்பே ஜயத்திலகை முதலிய ஏனைய மந்திரிமார் தம் பதவிகளை மனப்பூர்வமாக விட்டு விலகினர். அரசியல் விஷயமாக இலங்கையில் நேர்ந்த ஒரு பெருஞ்சங்கடம் முதன் முதல் இதுவே யெனலாம்; இப்படியான ஒரு சங்கடம் இற்றைக்கு இரண்டு வருடங்கட்கு முன்னர் ஏற்பட்டிருக்கும். ஆனால் அந்த நேரத்தில் ஸேர். பரன் ஜயத்திலகை கௌரவமாகத் தம் பதவியை விட்டு விலக மனம் பொருந்தவில்லை. அந்தச் சமயத்தில் ஸேர். பரன் ஜயத்திலகையின் பேடித் தனத்தைக் கண்டே தேசாதிபதியும் பொலிஸ்தலைவரும் இந்தச் சிங்கள மந்திரிமாரை இப்படி அலட்சியஞ் செய்யத் தலைப்பட்டனரென்றால் அது பிழையாகாது.

இனி நடப்பது என்ன என்பதை இப்பொழுது சொல்ல முடியாது; இப்பொழுது அரசாங்கசபை அங்கத்தவர்கள் எல்லாரும் ஒருங்கு கூடுவார்களாம்; அந்தக் கூட்டத்தில் தங்கள் பதவியை விட்ட மந்திரிமாரெல்லாருஞ் சமுகமாயிருப்பாராம்; மந்திரிமார் தம் பதவியை விட்டு விலக நேர்ந்த காரணத்தை அக் கூட்டத்தினர்க்குச் ஸேர். பரன் எடுத்து உரைப்பாராம். அதன்பின் அவர்களெல்லாரும் என்ன செய்வார்களென்பதைப் பின்னர்த்தான் அறிய முடியும். அரசாங்கசபை அங்கத்தவர்களும் தாங்களாக விலகுவார்களோ, இல்லையேல் விலகாதொழிவார்களோ,- அதுவுமில்லையேல் தேசாதிபதி இவர்களைக் கலைக்கும் வரைக்கும் இருப்பாரோ என்ற இவைகள்தான் ஆசங்கைக் கிடமானவையாகும்.

இனி இந்த விஷயத்தில் எங்கள் தேசாதிபதி யென் செய்வாரென்பதை நாம் இருந்து பார்க்க வேண்டியது. மந்திரிமாரில்லாத ஒரு நானமான அரசாங்கசபையை வைத்துக் கொண்டு இத் தேசாதிபதி பரிபாலனம் நடத்துவாரோ, இல்லையேல் இப்பொழுது உள்ள அரசாங்க சபையை ஒருங்கு கலைத்து விட்டுப் புதிய தேர்தலுக்காகிய ஒழுங்குகளைச் செய்வாரோ, அதுவுமில்லையேல் ஒவ்வொரு உத்தியோகத் துறையிலுமுள்ள தலைமை உத்தியோகத்தரைத் தமக்குத் துணையாகக் கொண்டு பரிபாலனம் நடத்தப் போகிறாரோ; இவைகளில் எதனைச் செய்யப் போகின்றாரென்பதை இப்பொழுது சொல்லுதல் முடியாது: அரசாங்கசபை அங்கத்தவர்களுட் சிலர் மந்திரிமார் இப்பொழுது செய்த செயல் முறையானதென்றும், ஆனால் இப்படிச் செய்யும் போது அரசாங்க சபைப் பிரதிநிதிகளாகிய தங்களைச் சிறிதும் யோசித்திராமை தவறென்றும் ஆனதினால் மந்திரிமாருடன் தாங்கள் ஒத்துழைப்பதற்கு நியாயமில்லை யென்றும் அபிப்பிராயப்படுகின்றனராம். இன்னுஞ் சிலர் ஸேர். பரன் ஜயத்திலகையைத் தம் மந்திரிப் பதவியை விட்டு நீங்கச் செய்வதற்காகவே ஏனைய மந்திரிமாரும் தம் பதவியை விட்டனரென எண்ணுகின்றார்களாம். இங்ஙனமாக இலங்கை மகாசபையார் தாம் நேற்றுக்கூடிய கூட்டத்தில் அரசாங்கசபைப் பிரதிநிதிகள் எவ்விதத்திலும் மந்திரிமாருடன் ஒத்துழைக்க வேண்டுமென நிர்ணயஞ் செய்தனர். இவ் விஷயமாக நாம் சொல்லத் தக்க தொன்றுண்டு. மந்திரிமார் ஒருமித்துத் தங்கள் பதவியை விட முந்தி அரசாங்க சபை அங்கத்தவருடன் யோசித்திருக்க வேண்டியது முறைமைதான். அங்ஙனம் இவர்கள் அவர்களுடன் யோசியாமல் விட்டது அம் மந்திரிமார் மீது தவறாகும். ஆனால் மந்திரி மார் ஒருங்கு விலகிய பின்னர் அரசாங்கசபை அங்கத்தவருட் பாதிப்பேர் அவர்களுடன் ஒத்துழைத்தும் பாதிப்பேர் ஒத்துழையாதும் கருமஞ் செய்ய நினைத்தல் இந் நாட்டின் சுதந்திர விருத்திக்குப் பெரும் பிரதிகூலமாகவே விளையும். இந்தச் சமயத்தில் மந்திரிமார் செய்த செயல் சுயமரியாதையைக் காப்பதாகும்.

தலைவரின் சிக்கனமுறைக்கு ஆதரவு

யாழ்ப்பாணப் பட்டினசபையின் விசேஷ கூட்டம்.

வேலைநிறுத்தம்பற்றி அறிக்கை.

யாழ்ப்பாணம், பெப், 25.

யாழ்ப்பாணப் பட்டினசபையின் விசேஷகூட்டமொன்று நேற்று நடைபெற்றது. அதுகாலை சபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நகரசுத்திவேலை செய்யும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தஞ் செய்ததுசம்பந்தமாக ஓர் அறிக்கையைச் சபையிற் படித்தார். அதன்பின்னர்த் தலைவர் அநுட்டித்துவரும் சிக்கன முறைகளை மனப்பூர்வமாக ஆதரித்து ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலைவர் தமது அறிக்கையிற் குறிப்பிட்டதன் சாராம்ஸமாவது:-

நகரசபை லொறிகளும் குப்பை வண்டிகளிலும் தேவைக்கதிகமான ஆட்கள் வேலைசெய்வதாக ஓர் அங்கத்தவர் என்னிடங் கூறினர். அதனையொட்டி இரண்டு மூன்று நாட்கள் லொறிகளையும் வண்டிகளையும் பின்தொடர்ந்து சென்று எவ்வாறு வேலை நடக்கிறதென்பதை அவதானித்து வந்தேன். அதன் பிறகு லொறிகளுக்கு 4 ஆட்களும் வண்டிக்கு ஒரு ஆளும் போதுமென்ற முடிவுக்கு வந்து இம்மாதம் 7-ந் திகதியன்று அவ்வாறு உத்தரவு பிறப்பித்தேன்.

இந்த யுத்தகாலத்தில் நமது பட்டினசபையின் செலவை இயன்ற மட்டிலுங் குறைக்கவேண்டும். மேற்கூறியவாறு நகரசுத்தித் தொழிலாளர்களைக் குறைப்பதானால் நகரின் சுத்தத்திற்குப் பங்கம் ஏற்படாதென்றதை அறிந்தே அவ்வாறு செய்தேன். பணம் மிஞ்சினால், நகரிற் பிரசவ விடுதிகளை ஏற்படுத்தலாம். இன்னும் உபயோகமான நிரந்தரமான ஆக்கவேலைகளைச் செய்யலாம். நிரந்தர உத்தியோகத்திலிருக்கும் உயர்தரச் சிப்பந்திகளை உடனே நிறுவனக் குறைப்பது சாத்தியமில்லை. 55 வயசுக்கு மேற்பட்டவர்களை ஓய்வெடுக்கச் சொல்லி மேற்கொண்டு புதிதாகச் சிப்பந்திகளை நியமிக்காமலிருந்தாலே போதுமானது.

தலைவர் தமது அறிக்கையை முடித்துக்கொண்டபின்னர்த் தலைவர் செயலிற் கையாடும் சிக்கன முறைகளை ஆதரித்தும், அவரது சிக்கனக் கொள்கையைப் பாராட்டியும் திரு. S. பதஞ்சலி ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இலங்கையிற் பெரியதோர் அரசியல் நெருக்கடி

மந்திரிமாரெழுவரும் தத்தம் பதவிகளைத் தாமாகவிட்டுவிலகினர்

மூலோயாத் தோட்டச் சம்பவத்தின் விளைவு

இன்று இலங்கை அரசியலில் ஒரு மிகப் பெரிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

சென்றஆண்டு ஜனவரிமாதத்தில் மூலோயாத் தேயிலைத் தோட்டத்தில் நடந்த தொழிலாளர் வேலைநிறுத்தமும் அதனாற் பொலிஸார் அங்கு போய்க் குழப்பத்தை அடக்குகின்றோம் என்று கூறித் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்து கோவிந்தன் என்ற ஒரு தொழிலாளியை இறக்கும்படி செய்ததும் யாபேர்கள் அறிந்தவையேயாம்.

குறித்த துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக விசாரணை நடத்துதற்கு ஒரு விசாரணைக்குழு நியமிக்க வேண்டுமென்று தேசாதிபதியும் அரசாங்கசபையாரும் தீர்மானித்தனர். அதுவேயுமன்றி, குறித்த விசாரணை முடியும் வரையில், குறித்த மூலோயாக் குழப்பக்காரணமாகப் பொலிஸார் தொடர்ந்திருந்த வழக்குகளைப் பின்போட வேண்டுமென்றும் அரசாங்கசபையார் தீர்மானித்தனர். விசாரணைக் குழுவும் நியமிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதி திரு. சி. குமாரசுவாமி அவர்கள் கண்டியில் விசாரணையை நடத்திவருகின்றார். வழக்குகளைத் தவணையிட வேண்டுமென்று அரசாங்கசபையார் செய்த தீர்மானத்தை யொட்டி உள்நாட்டு விஷய மந்திரி ஸேர். டி. பி. ஜயத்திலகா பொலிஸ் தலைவராகிய மிஸ்றர் பாக்ஸுக்கு உத்தரவிட்டார். இந்த உத்தரவைக் கொண்டு நடத்த முடியாது என்று மிஸ்றர் பாக்ஸ் பதிலுரைத்து, கண்டியிலுள்ள பொலிஸ் குழுவினர்க்கும் "எவ்விதத்திலும் வழக்கைத் தவணையிடச் செய்ய உடன்படாதீர்கள்' என்று உத்தரவிட்டார்.

பொலிஸ் தலைவர் தமது மேலதிகாரியாகிய உள்நாட்டு மந்திரியின் உத்தரவைமீறி நடந்ததொன்பதே குறித்த நெருக்கடிக்குக் காரணமாகும்.

இவ்விவகாரம் ஈற்றில் மந்திரிகளின் ராஜினாமாவில் முடிவெய்தியது. சென்ற செவ்வாய்க்கிழமை யன்று மந்திரிகள் தங்கள் ராஜினாமாவைத் தேசாதிபதியிடம் சமர்ப்பித்து விட்டனர்.

முதலில் விவசாய மந்திரியின் ராஜினாமா

ஆயின், ராஜினாமாச் செய்யும் விஷயத்தில் விவசாய மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகா முந்திவிட்டார். திங்கட்கிழமையன்று இரவே அவர் தமது ராஜினாமாப் பத்திரத்தைத் தேசாதிபதிக்கு அனுப்பிவிட்டார்.

திங்கட்கிழமை மாலை இராணி மாளிகையில் மந்திரிகளும் தேசாதிபதியும் ஒருங்கு கூடி ஆலோசனை நடத்தியபின், அன்றிரவே, சேனநாயகா ராஜினாமாக் கடிதத்தைத் தேசாதிபதியிடம் சமர்ப்பித்து விட்டார்.

செவ்வாய்க்கிழமை காலை திரு. சேனநாயகா அரசாங்கசபைக்கு வந்திருந்தபொழுது தேசாதிபதியின் பதில் அவரிடம் கொடுக்கப்பட்டது. மூலோயா விஷயத்தில் தேசாதிபதி காட்டிய மனோபாவம் அவருக்கு அதிருப்தியளித்தமையாலேயே அவர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

இராணி மாளிகையில்

திங்கட்கிழமைமாலை நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் தேசாதிபதியிடம் எவ்வாறு விண்ணப்பஞ் செய்து கொள்ள வேண்டுமென்பதுபற்றி ஆலோசனை செய்யப்பட்டது. அதன் பின்னர், பிற்பகலில் மந்திரிகள் இராணிமாளிகையில் தேசாதிபதியைச் சந்தித்து அவரோடு ஆலோசனை நடத்தினர். மாலை 5 மணிவரை இம்மகாநாடு நடைபெற்றது.

திரு. சேனநாயகாவும் இம்மகாநாட்டிற் கலந்து கொண்டார். இம்மகாநாடு முடிவடைந்த பின்னரே திரு சேனநாயகா இனித்தாம் மந்திரிபதவியை வகிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார்.

செவ்வாய்க்கிழமைக் கூட்டம்

செவ்வாய்க்கிழமை காலை மந்திரிமார் அறுவரும் அரசாங்கசபையைச்சேர்ந்த ஆலோசனை அறையிற் கூடிய பொழுது திரு. சேனநாயகா தாம் ராஜினாமாச் செய்ததன் காரணத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறிவிட்டு அங்கிருந்து வெளியே வந்துவிட்டார்.

திரு. சேனநாயகாவை ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி கண்டு பேசிய பொழுது, அவர் இந்தச் சந்தர்ப்பத்தில் தாம் அறிக்கை எதுவும் விடுக்க விரும்பவில்லை யென்றும், ஆயின், பொதுமக்களுக்குத் தாம் பல விஷயங்கள் தெரிவிக்கவேண்டியதாயிருக்கு மென்றும் கூறினர்.

உடுப்பிட்டிக் கொலை வழக்கு

முதலாம் எதிரிக்குப் பத்துவருடம்

இரண்டாம் எதிரி விடுதலை பெற்றான்

உடுப்பிட்டியிலுள்ள தனக்காரக் குறிச்சியில வசிக்கும் முருகுப்பிள்ளை—விசுவலிங்கமும், சினிவாசகம்-ஆறுமுகமாகியவருள் முதலாம் எதிரி அவ்வூர் முத்தப்பிள்ளை-ஐயமுத்து என்பவரைச் சென்ற 1939ம் ஆண்டு செப்டம்பர் 2ந்தேதி நடுப்பகல் ஒருமணியளவில் ஒரு கத்தியாற் குத்திக் கொலை செய்ததாயும், இரண்டாம் எதிரி இச்செய்கையை முதலாம் எதிரி செய்த போது அவனைத் தூண்டிச் செய்யும்படி கூறினதாயும் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் சுப்ரீம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

யூரித்தலைவராகத் திரு. வீரசிங்கம் தெரிந்தெடுக்கப்பட்டார்.

எதிரிகட்காகத் திருஜி.ஜி. பொன்னம்பலம் திரு. எஸ். சிவஞானசுந்தரத்தினமும் திரு கே. முத்துக்குமாருவினது உதவியைக் கொண்டு வாதித்தார். முதலாவதாக முத்து-இராசதுரை கூறியவற்றின் சாராம்சமாவது:-

இறந்த ஐயமுத்துவை எனக்குத் தெரியும். இச்சம்பவம் நடந்த இடத்திற் கடைவைத்திருக்கும் இராசாவையும் தெரியும். இச்சம்பவம் நடந்த தினத்தன்று நானும் இறந்த ஐயமுத்துவுமாக இராசாவின் கடைக் கணக்குப் பார்த்து அவருக்குக் கொடுக்க வேண்டிய காசைக் கொடுப்பதற்குச் சென்றோம். எதிரிகள் இருவரும் எம் பொன்னுத்துரை என்பவரைத் துரத்திக் கொண்டு வந்தனர். பொன்னுத்துரை இராசாவின் கடைக்குள் ஓடிவந்து இராசா இருந்த கதிரைக்குப் பின்புறத்தே நின்றான். இவர்கள் ஏன் பொன்னுத்துரையைத் துரத்தி வந்தனரென்று எனக்குத் தெரியாது. எதிரிகள் தங்கள் கையில் ஒன்றும் வைத்திருக்கவில்லை. எதிரிகள் இராசாவின் கடைக்குட் சென்று பொன்னுத்துரையைப் பிடிக்க எத்தனித்த போது இராசா அவர்களைக் கடைக்குள் வராதபடி தடுத்தார். அவர்கள் வெளியே நின்று பொன்னுத்துரையை வெளியே அனுப்பும்படி கூறினர். இவற்றைப்பார்த்துக் கொண்டு நின்ற ஐயமுத்துவும் நானும் இரண்டு எதிரிகளையும் பிடித்துச் சென்றோம். ஐயமுத்து முதலாமெதிரியையும் நான் இரண்டாமெதிரியையும் பிடித்துச் சென்றோம். இக்கிடையில் கடைக்காரர் இராசா கடையின் பிற்பக்கக் கதவால் பொன்னுத்துரையை வெளியே அனுப்பிவிட்டார். பொன்னுத்துரை இக்கடைக்குப் பக்கத்தேயுள்ள கார்க்கொட்டகை யொன்றற் கருகாமையால் வந்தார். இவர் வந்ததை எதிரிகள் கண்டனர். அப்போது முதலாம் எதிரி ஐயமுத்துவின் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ளத் தெண்டித்தான். ஐயமுத்து பிடியை விடவில்லை. இதனை அவதானித்த இரண்டாமெதிரி இவன் இதில் குறுக்கிடுகிறான். குத்தடா ஆளை" என்று, முதலாமெதிரிக்குச் சொன்னான். ஐயமுத்துவிற்குக் குத்தும்படி முதலாம் எதிரி ஐயமுத்துவுக்கு ஒரு வில்லுக்கத்தியாற் கழுத்திற் குத்தினான். ஐயமுத்து நிலத்தில் விழுந்து விட்டான். எதிரிகள் அவ்விடத்தை விட்டு ஓடினர். இச்சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிசார் வருவதற்கு முன்னர் இரு விதானைமார்கள் அங்கு வந்தனர். இதன் பின்னர்ப் பொன்னுத்துரையும் இராசாவும் வேறு பேரும் டாக்குத்தர் ஜே. பி. சுப்பிரமணியமும் சாக்ஷியம் கூறினர். பின்னர் எதிரிகட்காக வாதித்த நியாயவாதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இந்த அளவில் முதலாம் எதிரி தன்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டிலும் குறைந்த குற்றச் சாட்டாகிய கைபிழை பாடாகக் கொலை செய்த குற்றச்சாட்டிற்குத் தான் குற்றவாளி யெனக் கூறுவதாகக் கூறினர். முடிக்குரிய நியாயவாதியும் இதற்கு ஒத்துக் கொடுத்தார். நீதியரசர் வழக்கின் சாராம்சத்தை யூரிமாருக்கு எடுத்துக்காட்டி எதிரி ஒப்புக் கொள்ளும் குற்றச்சாட்டிற்கு முடிக்குரிய நியாயவாதியும் ஒத்துக் கொள்வதாலும் இவ்வழக்கை மேலும் விசாரணை செய்யவேண்டுமோ அல்லது எதிரி ஒப்புக்கொள்ளும் குற்றச்சாட்டுச் சரிதானென அவர்கள் ஒத்துக் கொள்ளுகிறார்களோ வென்ற அபிப்பிராயத்தைக் கூறும்படி அனுப்பினர். யூரிமார் ஏகமனதாக எதிரி ஒப்புக் கொள்ளும் குற்றச்சாட்டை ஒத்துக் கொள்வதாகக் கூறினர். நீதியரசர் முதலாம் எதிரிக்குத் தீர்ப்பளிப்பதற்கு இரண்டாமெதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு விசாரணையை நடத்தி முடிக்கும் வரையில் முதலாம் எதிரியைப் பிஸ்கால் பாதுகாப்பில் இருக்கும்படி கூறி எதிரி கூட்டினின்றும் வெளியே அனுப்பி விட்டு விசாரணையைப் பின்னும் தொடர்ந்து நடத்தினர். விசாரணையின் பின் யூரிமார் இரண்டாம் எதிரியை ஏகமனதாகக் குற்றவாளியல்ல வெனக் கூறினர். நீதியரசர் எதிரியை விடுதலைசெய்தார். முதலாம் எதிரி திரும்பவும் அழைக்கப்பட்டான். எதிரிகட்காக வாதிட்ட நியாயவாதி எதிரி மிகவும் இளமையுடையவனென்றும் (19 வயது) முன்னர் ஒரு வகையான குற்றச்சாட்டிலும் அகப்படவில்லை என்றும் இச்சம்பவம் நடந்தகாலம் தொடக்கம் இன்று வரையும் விளக்கமறியலிலிருக்கிறானென்றும் ஆகையால் நீதியரசர் எதிரி மீது தீர்ப்புக் கூறுகையில் சலாக்கியம் காட்டவேண்டும் என்று கேட்டார். நீதியரசர் நியாயவாதியைப்பார்த்து சலாக்கியம் காட்டுகிறது மிகவும் கடினமான காரியமாய் இருக்கிறதென்றும் ஏனெனில் எதிரி கத்தியைக் கண்டபடி பாவித்து விட்டானென்றும் அவன் எது வகையிலும் ஒருவனைக் கொலை செய்து விட்டானென்றும் ஒருவனைக் கொல்ல நினைத்து வேறொருவனைக் கொன்றான் என்றும் கூறி பின்னர் நியாயவாதி கூறிய நியாயங்களை எதிரிக்கு விளக்கி இவை இப்படி இருந்தாலுங் கொலைக்குற்றத்திற்குரிய தண்டனையினின்றும் நீ தப்பினது உனக்குப் பெரும் சலாக்கியமென்று நான் நினைக்கிறேன். இப்படி நீ தப்பினது கைபிழைபாடாய்க் கொலை செய்த குற்றச் சாட்டிற்கு நீ குற்றவாளியென்று கூறியதை முடிக்குரிய நியாயவாதியும் யூரிமாரும் ஒத்துக் கொண்டமையாற்றான். ஆனாலும் நீ கத்தியைக் கண்டபாட்டிற்கு பாவித்திருக்கிறாய். இப்படிப்பாவித்ததால் ஒருவனைக்கொலை செய்து விட்டாய். நீ சிறைக்கூடத்தில் நல்லவனாய் நடந்து திருந்திச் சிறைக்கூடத்தால் திரும்பிவரும்போது நல்லவனாய் வரவேண்டுமென்பதை உனது மனத்தில் நல்லாய்த் தீர்மானித்துக் கொள் எனக்கூறி எதிரிக்குப் பத்து வருடக் கடூழிய மறியற்றண்டனை விதித்தார்.

க—கி

ஹிட்லரின் வீராவேசப் பிரசாரணம்

மூன்று தத்துவ ராச்சியங்கள்' எம்பக்கல் நிற்கின்றன

நாசிக்கட்சியார் இருபதாமாண்டு விழா சென்ற வாரம் நடந்தபோது மியூனிச் என்னுமிடத்தில் ஹேர் ஹிட்லர் பின் வருமாறு பிரசாரணஞ் செய்தார்.

"ஜர்மனியராகிய நாங்கள் தனித்து நிற்கிறோமென்று நினைக்கக்கூடாது; இற்றைக்கு 20 வருடங்கட்கு முந்தி நடந்த மகாயுத்தத்திலேயே பிருத்தானியர் இத்தலியரை ஏமாற்றி விட்டார்கள்; அந்த மகாயுத்தத்திலே தங்களுக்கு வெற்றி வருமாயின் இந்தியாவிற்குச் சுயராஜ்யம் கொடுப்பதாகச் சொல்லி ஆங்கிலர் இந்தியரையும் ஏமாற்றிவிட்டார்கள்; அராபியரும் பின் யூதரும் அனுப்பப்பட்டனர்; பிருத்தானிய பிரான்சிய அதிகாரிகள் தங்கள் சாதியினரையும் முறையே அனுப்பிவிட்டார்கள்; ஆனால் எல்லாரைக் காட்டிலும் அதிகம் ஏமாற்றமடைந்தவர்கள் ஜர்மனியராகியவர்களே. மகாயுத்தம் நடந்த பிறகு எங்கள் பகைவர்கள் எங்களுக்குப் பல நன்மைகளைச் செய்வதாக வாக்களித்திருந்தார்கள்; ஆனால் நாங்கள் அணுவளவும் அவர்கள் வாக்கை நம்பவில்லை. அராபியர் பிருத்தானியருக்கு மாறுகச் சமர் செய்த நேரத்தில், இந்தியர் அவர்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்த சமயத்தில் பிருத்தானிய மந்திரியாகிய மிஸ்டர் சாம்பர்லேன் ஜர்மனியர்தான் முழு உலகத்திலும் அதிகாரஞ் செய்யப் பார்க்கிறார்கள்; அதற்காகத்தான் தாங்கள் யுத்தஞ்செய்யத் தொடங்கியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்; கடவுள் உலகம் முழுவதையும் பிருத்தானியர் தான் அடக்கியாள வேண்டுமென்று உலகத்தைப் படைத்தவரல்லர். பூகோளத்திலே மூன்று பங்கை ஒரு சிறிய சாதியார் பரிபாலித்தல் கடவுளுக்கு விருப்பமாயிராது. தங்கள் சாதியினருக்கும் தங்களுக்குக் கீழ்ப்பட்டுள்ள சனங்களுக்கும் ஆகவேண்டிய வசதிகளைச் செய்ய இயலாதவர்களாகிய சிறிய சாதியினராயுள்ள ஆங்கிலர் உலகத்தில் மூன்றிலொருபாகத்தை ஆளுவது தெய்வசித்தமாயிருக்குமா?

பல சாதி ராச்சியங்கள் சம்பந்தமாகச் சொல்லுகில் நான் யாருக்கு மாறுக யுத்தஞ் செய்கிறேன்? எதற்கு மாறுகச் சமர் புரிகிறேன்? எவருக்கும் மாறில்லை; எதற்கும் மாறில்லை; இந்த பிருத்தானியர் உலகத்திலே அதிக தொகையினரைப் பரிபாலிக்கின்றார்கள்; ஆனால் தம்முடைய சொந்த நாட்டிலுள்ளவர்கள் வேலையில்லாமற் கஷ்டப்படும்போது அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஜர்மனியராகிய எங்கள் அதிகாரமும் உரிமையும் நீதியானவை. நான் எங்கள் நாடு, நம்மவர்கள் குடியிருக்கும் நாடு க்ஷேமமாக இருக்க வேண்டுமென்று சாதிக்கிறேன்; மத்திய ஐரோப்பாவில் ஜர்மனியராகிய எங்களுக்கே கூடிய உரிமையுண்டு; நாங்கள் மத்திய ஐரோப்பாவை நல்ல நிலையில் வைத்துள்ளோம்; இப்பொழுது தான் பிருத்தானியர் வந்து உரிமை பாராட்டுகின்றார்கள். மத்திய ஐரோப்பாவை நல்ல நிலையில் வைத்தவர்கள் நாங்களல்லவா? இந்த இடத்தில் எங்களுக்குப் பிரதிகூலமாக வேறு எவரும் வந்து கருமம் ஆற்ற விடமாட்டோம்.

ஜர்மனியருக்குத் துணையாக நிற்கும் தத்துவராச்சியங்கள்

இத்தலியருக்கும் எங்களுக்குமிடையேயுள்ள நண்பு சாமானியமானதல்ல; இரு பகுதியிலுமுள்ள அதிகாரிகளுக்கிடையே மாத்திரமுள்ள நண்பல்ல; இரு தேசத்திலுமுள்ள சனங்கள் முழுப்பேரும் பரஸ்பரம் நண்பு பூண்டிருக்கிறார்கள். ருஷியருக்கும் எங்களுக்குமிடையே இப்பொழுதுள்ள நிலைமையும் இப்படிப்பட்டதேயாகும். பகைவர்கள் எங்களுக்கும் ருஷியருக்குமிடையே பிரிவினையையும் யுத்தத்தையும் ஆக்கிவிட முயலுகிறார்கள்; ஆனால் அது வாய்க்கவில்லை. நான் ஒரு கருமத்தைச் செய்யத் தொடங்கினால் அரைகுறையாய் விடுவதில்லையென்பது உங்களுக்குத் தெரியும். ஒரு கருமத்திற் றலையிடுவேனாகில் அதைப் பூரணமாக்கிச் செய்து முடிப்பேன்; முந்திய மகாயுத்தம் நடந்த காலத்தில் எங்களுக்குப் பகையாயிருந்த ஜப்பான் இப்பொழுது எங்களுடன் நண்பு பூண்டு கொண்டது. இந்த மூன்று தத்துவராச்சியங்களும் எங்கள் பக்கமாகவல்லவா நிற்கின்றன. பிருத்தானிய பிரான்ஸியர் தங்களுக்குத் துணை புரியப் பலர் உண்டென்று நம்பியிருக்கிறார்கள்; ஆனால் இப்பொழுது யூதர் மாத்திரம் அவர்கள் பக்கலாக நிற்கிறார்கள்."

"நான் ஒரு போக்கிலியாம்"

"பிருத்தானிய மந்திரியாகிய மிஸ்டர் சாம்பர்லேன் என்னை வெறுக்கின்றார். அவர் வெறுத்தல் எனக்குப் பெருமையாகின்றது. அவருக்கு என்னிடத்தில் நம்பிக்கையில்லையாம்; ஆனால் நான் ஜர்மனிக்குத் துரோகியல்லேன் என்பது புலனாகின்றது; மிஸ்டர் ஈடின், மிஸ்டர் பெலிஷா முதலிய ஆங்கில ராசதந்திரிகள் என்னை ஒரு போக்கிலியென்கிறார்களாம்; அவர்களுக்கு நான் நண்பனல்லாமலிருத்தல் எனக்கு மிகச் சந்தோஷம்.

எங்கள் சைனியம்

எங்கள் சைனியமும் தங்கள் தலைவர்களைப்போல அபிமானத்திற் சிறந்ததாகும். பொருளாதாரவிஷயத்திலும் நாங்கள் எங்கள் பகைவரைக் காட்டிலும் நல்ல நிலையில் இருக்கிறோம்; எங்களுக்கு வேற்று நாடுகளிலிருந்து பொருள்பண்டம் வராதபடி தடுத்துவிடலாமென்று பகைவர்கள் முயற்சி செய்கிறார்கள்; பொருளாதார விஷயத்திலாயினும் படைவலியிலாயினும் பகைவர்கள் எங்களை வெல்லப் போவதில்லை; இப்பொழுது ஜர்மனிய மக்களே படைவலியில் ஏனைய தத்துவராச்சியத்தினரைக் காட்டிலும் மேலான நிலைமையில் இருக்கிறார்கள். கடவுள் ஒவ்வொரு சாதியினரையும் படைத்த அவரவருக்குரிய சுதந்திரங்களையும் அளித்துள்ளார்; ஜர்மனிய சாதியார் மாத்திரம் அழிந்துபோகவேண்டுமென்று தெய்வம் விரும்பமாட்டாது. இற்றைக்கு 20 வருடங்கட்கு முந்தியும் இப்பொழுதும் நான் கொண்டுள்ள நம்பிக்கை இதுதான், நாங்கள் வெற்றியடையாமல் முடியாது; ஆனதனால் நாங்கள் வெற்றியடைவோம்; உலகம் முழுவதும் எங்களுடன் மாறுபட்டாலும் நாங்கள் வெற்றி பெறுவோம்."

வின்லண்டினர் பின்னிற்கின்றனர்

ருஷியர் பல தானங்களைக் கைப்பற்றினர்

26-2-40

கரிலியன் நீரிணையில் வின்லண்டினர் பின்வாங்கியதற்குக் காரணம் போர்வீரர் போதாமையினாலல்லவாம். குண்டு மருந்து முதலிய யுத்த உபகரணங்கள் இல்லாமையினாலாம்.

சோவிஸ்ரோ தீவுகள் ருஷியராற் கைப்பற்றப்பட்டன. இந்தத் தீவுகளில் நின்றே வின்லண்டினர் குண்டுப்பிரயோகஞ்செய்து ருஷியருக்கு மாறுகக் கரிலியன் நீரிணையைக் காத்து வந்தனர்.

விப்புரி யென்னும் பட்டினம் பகைவரால் நாசமாக்கப்பட்டது. ருஷிய சைனியம் வின்லண்டினரின் அரணை ஊடறுத்துச் சென்று 26 அரண் செய்த தானங்களைப் பிடித்து விட்டது;

ஹெல்சிங்கி நகரின்மீது முதன் முறை 38 ருஷிய ஆகாய விமானங்களும் இரண்டாமுறை 58 விமானங்களும் பறந்து சென்று வரையின்றிக் குண்டுகளைப் பெய்து பெருஞ் சேதம் விளைத்தன.

சக்கஜோர்வியென்னும் பட்டினத்தை விட்டுப் பட்டின வாசிகள் ஓடுகின்றனராம்.

வின்லண்டினர் பலமுறை எதிர்த்தபோதும் பகைவர்கள் அவர்களைப் புறங்கண்டனர். வின்லண்டினர்க்குரிய 5 ஆகாயவிமானம் சுட்டுவீழ்த்தப்பட்டன.

விப்புரியென்னும் தானத்தைப் பிடிப்பதற்கு ருஷ்யர் அதனைப் பெருஞ் சைனியத்துடன் தாக்குகின்றனர்.

மேற்கு யுத்தமுனை

மோஸெலியாற்றங்கரையில் சில நாட்களாக ஜர்மனியர் பெருந்தொகையான சைனியத்தையும் யுத்தத்திற்கு ஆகவேண்டிய உபகரணங்களையும் கொண்டுவந்து சேர்க்கின்றனர். மார்ஷல் கோயறிங் என்பவரும் இன்னும் 4 ஜர்மனிய சேனைத் தலைவர்களும் ஆங்கு வந்து நிற்கின்றனராம்.

காற்சட்டைக்குள் அபின்

ஆரியகுளத்தடிவாசிமீது வழக்கு.

27-2-40

முன் அறிவித்தலைக்கொண்டு டக்கிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் வ. எம். செரிவ்மனும் 1593-ம் இலக்கப் பொலிஸ்காரனும் வேறுபேருமாகச் சென்ற இரவு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்குச் சென்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சாமான்கள் கொண்டு செல்லும் புகையிரதத்தைக் காத்து நின்றனர். அந்தப் புகையிரதம் இரவு 8-30 மணிக்குப் புறப்பட்டது. அதில் மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் பிரயாணஞ்செய்யும் வண்டி ஒன்று தொடுக்கப்பட்டிருந்தது. அவ்வண்டியில் காற்சட்டை மேற்சட்டை போட்டவரும் ஆரியகுளத்தடியில் வசிப்பவருமாகிய தம்பிப்பிள்ளை இராசரத்தினமும் வேறு பேருமிருந்தனர். இந்த இராசரத்தினத்தைச் சோதித்தபோது அவருடைய காற்சட்டைப் பையொன்றுக்குள் ஒரு ருத்தல் அபின் கண்டெடுக்கப்பட்டது. பொலிசார் ஆளையும் அபினையும் இன்று கொண்டுவந்து யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் நீதிபதி முன்னிலையில் ஒருவழக்கைத் தொடர்ந்தனர். எதிரியாகிய இராசரத்தினம் தான் குற்றவாளியல்லவெனக் கூறினர். நீதிபதி எதிரியை 300 ரூபா பிணையில் விட்டு வழக்கை மேல்விசாரணைக்கு வருகிற 28-3-40-ந் திகதிக்குத் தவணையிட்டார். க. கி.

ஊர்காவற்றுறைக் கொலைத்தனவழக்கு

எதிரிக்கு 5 வருஷக் கடுங்காவற்றண்டனை.

28-2-40

ஊர்காவற்றுறையிற் வசிக்கும் மருதன் கந்தையா 1939-ம் ஆண்டு மேமீ 3உ இரவு 8 மணியளவில் அல்லூர் முருகன் சின்னன் என்பவனைக் பொல்லாலடித்துப் படுகாயப் படுத்தியதினிமித்தமாகக் கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணை பின்பின், ஜூரிமார்களில் [illegible] எதிரி கடுங்காயம் வருவித்த குற்றச்சாட்டிற்குக் குற்றவாளியென அபிப்பிராயம் கூறினர். நீதியரசர் எதிரிக்கு ஐந்துவருஷக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். தண்டனை விதிக்குமுன்னர் எதிரி மிருகத்தனமாகக் காயக்காரனையோதிகள்மீது நடந்துகொண்டதாயும் எதிரிக்கு மறியற்றண்டனை மாத்திரம் கொடுப்பதோடு விட்டுவிடுவது போதாதென்றும் அதனோடு சவுக்கடியும் கொடுக்கவேண்டுமென்றும் இப்படிச் செய்வதற்குக் கட்டளைச் சட்டம் இடங்கொடாதபடியால் மறியற்றண்டனையை மாத்திரமே தான் விதிப்பதாயும் எதிரி நேரத்தில் கிறிமினல் குற்றங்கள் செய்யக்கூடியவனாகக் காணப்படுகின்றானென்றும் குறிப்பிட்டுத் தீர்ப்பைக் கூறினர். க. கி.

தட்டாதெருவில் திடீர் மரணம்.

28-2-40.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நாச்சிமார்கோவிலடியில் வசிக்கும் தட்டாரவகுப்பைச் சேர்ந்த குட்டித்தம்பி செல்வராசா 28-உ இரவு 2 மணியளவில் திடீரென இறந்துவிட்டதால் ஊரவர்கள் அவர் நஞ்சுண்டு இறந்துவிட்டதாகப் பேசிக்கொண்டனர். பிரேதத்தை டக்டர் சோதனைசெய்தபோது நஞ்சு இருக்கவில்லையென்றும் அவர் வேறு பலவகையான நோய்களால் இறந்ததாகவும் அபிப்பிராயம் தெரிவித்தார். க. கி.

ஸ்திரீபுருஷர்களுடைய சென்மத்திரயங்களிலேவிவாகஞ் செய்துகொள்ளலாமென்பதற்குப் பிரமாணம்

'கன்னிதன் சென்மங்கண் மூன்றங் கடிமணத்திற்கு நன்றும்' என்னும் பிரமாணப்படி பெண்ணினுடைய சென்மத்திரயங்கள் விவாகத்திற்கு மிகவும் நன்றும். "அவன் பத்தாயகாலருஞ் சுபம்" என்னும் பிரமாணப்படி புருஷனுடைய பத்தாம்காலில் விவாகம் செய்துகொள்ளலாம். ஒழித்த சென்மமும் இருபதாம்காலும் ஆகாவாம். இவைகளைக்கவனியாது,

"மயிர்வினைகல்விமணவினை போக்குமருந்தருந்த, உயர்வுறநூல் விளையுண்டி சிமந்தஞ் சிராத்தமிவை, மியல் புறத்தென்பர்" இச்செய்யுளையும் "கற்பகாள் மூன்றிலெண்ணே கடிமணம்" இவற்றையும் மனனம் பண்ணிக்கொண்டு பெண்ணினுடைய சென்மத்திரயத்திலே விவாகம் செய்யக்கூடாதென்பவர்க்கு என் செய்வது? அதுமட்டோ "பிறந்தவிராசியும் அந்தமுமாறெட்டும் பேசுமிற்றூ—சிறந்த கன்மங்கலகாரியமாகிற்கும்" இதனை உதாரணமாக வைத்துக்கொண்டு உதயலக்கினமாகிய சென்மராசியிலே விவாகஞ் செய்யக்கூடாதெனத் தடுக்கின்றனர். "சென்மவோரை—நிறைந்த மணமுண்டிதாபனஞ் சௌளம் போக்காடை யேருக்கறைந்தனர்" அஃதாவது சென்மவிராசியிலே விவாகம், போசனம், தேவப்பிரதிட்டை, சௌளம், பிரயாணம், வஸ்திரபாணம், உழவு இவற்றைக்காம், என்னும் பிரமாணத்தாலே சென்மலக்கினத்திலே விவாகஞ்செய்யலாமென்பதையும் அறிக.

ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்
சுதுமலை

அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்தியமகாசபை

இந்துசாதன ஆசிரியரவர்கட்கு:—
ஐயா!

பிரமாதி௵ மார்கழி௴ 20, 21, 22 ந் தேதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்வித்தியாசாலை மண்டபத்தில் கூட்டப்பெற்ற அகில இலங்கைச் சைவமகாநாட்டில் மானிப்பாய் இந்துக்கல்லூரித் தலைமையாசிரியர் திரு. வி. வீரசிங்கம் அவர்கள் கொண்டுவந்த பிரேரணையின் பிரகாரம் ஒரு அகில இலங்கைச் சைவஇளைஞர் மத்தியமகாசபையை நிறுவுதற்கு மகாநாட்டிலுள்ள சைவ இளைஞர் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த மாசம் 13ம் திகதி (25-2-40) முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கூடினார்கள்.

பிரதிநிதி அனுப்பிய சங்கங்கள் சைவவாலிபசங்கம் இடைக்காடு, வேலணைத்தீவுச் சைவஇளைஞர்சங்கம், சைவஇளைஞர்சங்கம் சைவாங்கிலகலாசாலை கொக்குவில், சைவவாலிபசங்கம் வல்வை, சைவஇளைஞர்சங்கம் சங்கத்தானைச்சைவவித்தியாசாலை, சைவஇளைஞர்சங்கம் உரும்பராய்ச் சைவத்தமிழ்வித்தியாசாலை, சைவவாலிபசங்கம் அனலைதீவு, இளைஞர் கலாவிருத்திச்சங்கம் தொல்புரம், சைவஇளைஞர்சங்கம் சங்கானை, சைவஇளைஞர்சங்கம் வேலணை, இந்துவாலிபசங்கம் சீரவை, இந்துவாலிபசங்கம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, சைவஇளைஞர்சங்கம் வட்டுக்கோட்டை சைவாங்கிலகலாசாலை, சைவஇளைஞர்சங்கம் சிவியாதெரு.

மானிப்பாய் இந்துக்கல்லூரிப்பிரதமாசிரியர் திரு. வி. வீரசிங்கம் அவர்களும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு. ஏ. குமாரசுவாமி அவர்களும், மத்தியஇந்துவாலிபசங்கத் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் கிளைப்பள்ளிக்கூடங்களும்) தலைவர் திரு. இ. சிவகுருநாதர் முதலான பெரியோர்களும் சமுகமாயிருந்தார்கள். தற்காலிகத் தலைவராகத் திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். திரு. மு. மயில்வாகனம் அவர்கள் காரியதரிசியின் கடமையாற்றினர்.

குறித்தகூட்டத்தின் நோக்கத்தைப் பற்றிப் பல பெரியார்கள் பேசினார்கள். பின் கீழே காட்டப்படும் தீர்மானங்கள் நிறைவேறின.

(அ) குறித்தஅகில இலங்கைச் சைவமகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின்பிரகாரம் இங்கு சமுகமளித்திருக்கும் சைவவாலிபசங்கப் பிரதிநிதிகள் ஓர் அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்தியமகாசபையை நிறுவுதற்குத் தீர்மானஞ்செய்கிறார்கள்.

(ஆ) இக்கூட்டத்துக்குப் பிரதிநிதிகளையனுப்பிய சைவவாலிபசங்கங்கள் குறித்த அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்தியமகாசபைக்கு அங்கத்தவர்களாகக் கருதப்படுவர்.

(இ) குறித்தஅகிலஇலங்கைச் சைவ இளைஞர் மத்தியமகாசபைக்குரிய பிரமாணங்களை ஆக்குவதற்கு ஏழுபேர் கொண்ட ஒரு நிருவாகசபை தேவையென்று தீர்மானிக்கப்பட்டது.

(ஈ) மேலேகாட்டிய நிருவாகசபையின் உறுப்பினராகத் திருவாளர்கள் கா. அருணாசலம், வி. வீரசிங்கம், அ. ராசலிங்கம், ச. சப்பையா, மு. மயில்வாகனம் ஆகியவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். [சபைகூட்டுபவர் திரு. மு. மயில்வாகனம். வேண்டுமானால், இவர்கள் பிறரையும் சேர்த்துக்கொள்ளலாம்]

(உ) இக்கூட்டம் 24-3-40 அன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் திரும்பவும் நடைபெறவேண்டுமென்றும் அக்கூட்டத்தில் பிரமாணங்களை ஏற்றுக்கொள்ளுதலும் உத்தியோகத்தவர்கள், நிருவாகசபை அங்கத்தவர்கள் தேர்தலும் நடைபெற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இங்ஙனம்
மு. மயில்வாகனம்
[அகில இலங்கைச் சைவ மகாநாட்டுக் காரியதரிசி]

உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்.)

மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை

"நீங்கள் இன்று வாடிய முகத்துடன் காணப்படுகின்றீர்களே; என்ன காரணம் என்பதை நான் அறியலாமா? எனக்குச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்லப்போகிறீர்கள். நான்தான் தெரிந்தோ தெரியாமலோ உங்களுக்கு ஏதும் அபராதஞ் செய்துவிட்டேனோ; அப்படித்தான் செய்தாலும் நீங்கள் என் பிழையைப் பொறுக்கக் கொள்வீர்களல்லவா? உங்கள் வீட்டில அம்மா, ஐயாவுடன் ஏதும் மனஸ்தாபமா? நீங்கள் அகமும்முகமும் மலர்ந்திருந்தாலொழிய நானும் சந்தோஷமாயிருப்பேன்; சூரியனுடைய ஒளி பிரதிபிம்பிக்காவிட்டால் சந்திரன் பிரகாசித்தல முடியாதென்று சொல்லுகிறார்களே; அதுபோலத்தானே உங்களுக்கும் எனக்குமிடையேயுள்ள சந்தோஷமும் துக்கமுமிருக்கும்......" என்று பலவாறு ஞானம்பிகை அன்று பின்னேரம் தன வீட்டில் வந்திருக்கும் இராசசேகரனைப் பரிந்து கேட்டாள். 'கண்ணே, ஞானம், நீர் இருக்கும்போது எனக்கென்ன கவலை; ஆனாலும் "மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை" யென்ற விதமாக, இக்குவாந்து இவ்வளவு காலமும் சந்தோஷமாக இருந்த நான், இன்னும் ஒரு கிழமையிற் கவலைப்படப்போகின்றேனே யென்பதனை நினைக்க இப்பொழுதே என் மனத்திற் கவலை பிறந்துவிட்டது' என்று சொல்லுவதற்கு இடையில், ஞானம் பதைபதைத்து "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்; ஒரு கிழமையிடையில என்ன அக்கசமாசாரம் வரப்போகின்றது; ஐயோ, அதை எனக்குச் சொல்லுங்கள்" என்று கலக்கத்துடன் கேட்க, "அப்படியொன்றுமில்லை; கண்ணே நீர் கலங்கவேண்டாம்; நீர் இத்தனை காலும் என்மீது பாராட்டிய அன்பே என்னை இனித் துயரப்படுத்துமென்று எண்ணக் கிடக்கின்றது; எங்கள் கலாசாலைப் படிப்பு முடிவதற்கு இன்னும் ஏழு நாட்கள் தான் இருக்கின்றன; அந்த ஏழு நாட்களும் ஏழு மணித்தியாலம் போலக் கழிந்துவிடும்; நான் உமக்குப் பயணஞ்சொல்லி உம் [illegible] கொண்டு படிப்பதற்குப் போகவேண்டியதுதான்" என இராசசேகரன் துயரத்துடன் சொன்னான். "எல்லாமறிந்த நீங்கள் இப்படிக் கவலைப்பட்டால், நான் ஏழை, உங்களைப்பிரிந்து இங்கிருந்து என்ன செய்வேன்; கேட்கிறேன் [illegible] துறைபதியாதீர்கள்; பட்டினத்திற்குப் போயவிட்டால் என்னை மறந்துவிடுவீர்களோ! நீங்கள்தான் ஒருபோது என்னை மறந்தாலும் நான் உங்களை மறந்து உயிர் வாழ முடியுமா?

எங்கிருந்தாலும் அன்பிற்குப் பங்கமா!

சமீபத்திலிருந்தாற்றான் அன்பு தூரத்திலிருந்தால் அன்பில்லையா? என இப்படிச் சொல்லுகிறீர்கள்! என்னைச் சோதிக்கின்றீர்களா? நீங்கள் அறியாத விஷயத்தை நான் சொல்லுகிறேன் என்று குறை யெண்ணுதீர்கள்; உங்களைத் தேற்றுவதற்காகச் சொல்லுகிறேன்; சூரியன் இருப்பதெங்கே? தாமரை மலர்வதெங்கே? கார்மேகமெங்கே? பசுந் தோகைமயிலெங்கே? இவைகள் ஒன்றற்கொன்று வெகு தூரத்திற்றானே உள்ளன; தூரமென்ற காரணம்பற்றிச் சூரியனைக் கண்டு தாமரை மலராமல் விடவில்லையே; அந்தச் சூரியன் முகிற்படலத்தால் மறைக்கப்பட்ட காலத்திலும் தாமரை அலர்ந்தபடியிருக்கின்றதல்லவோ: தூரத்திலே சஞ்சரிததாலும் கருமுகிலைக் கண்டு மயில்களிகொண்டு நடனஞ்செய்வது இயல்புதானே; ஆனதால் நீங்கள் என் பிரிவையிட்டுக் கவலைப்படவேண்டாம்" என்று ஞானம்பிகை தன் மைத்துனனுக்கு அன்புததும்பக் கிள்ளைவிள்ளுவதுபோல் விளம்பினாள்; தலைக்குரியாள் விம்பத்துடன் கூறிய தேனினுந் தித்திக்கும் இனிய தேறுதல் வார்த்தையை அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த இராசசேகரன் தன் கவலை முழுவதும் நீங்கப்பெற்று முகமலர்ச்சியோடும் புன்னகையோடும் ஞானத்தைப் பார்த்து "ஏனருமையே, இவ்வளவு கல்வியறிவும் அதற்கேற்ற அணியணிய புத்தியும் உம்மிடத்தில் உண்டென்பதை இன்றுதான் அறிந்தேன்; நான் பெற்ற பாக்கியமே சிறந்த பாக்கியம்; அன்னை தனையும் அயர்ன் பணியும் மலர்ப்பசும்பொன்னின் அழகும் புயப் பொலுமையும்.......... என்று மாதிரி மதியுட் பேசில் இளையுடைமான் பெண்" என்று ஔவை மூதாட்டி அக்காலத்திலே பாடி வைத்தது உம்மைப்போன்ற உத்தமிகளைக்கண்டல்லவா! எங்கள் அருமை மாமா உமக்கு நல்லாகத் தமிழ் படிப்பித்திருக்கிறார்; உம்மைப்போதத் தமிழறிவு எனக்கு இல்லாமையினாற்றான் நான் இப்படிக் கவலைப்பட்டேன்; பின் நீர் தேற்றத் தேற்றினேன்" என்று அவளைப் பாராட்டினான்; அதைக் கேட்ட ஞானம் "இப்படி என்னைப் புகழாதீர்கள்; எண்ணறக்கற்று அழகுற வாசித்தாலும் பெண்புத்தி பேய்ப்புத்திதானே" என்று சல்லாபமாகப் பேசிக்கொண்டு நிற்கும்போது அவளுடைய தாய் மங்கை கூப்பிட்டு "இந்தா, இவைகளைக் கொண்டுபோய் அவருக்கு உண்ணக்கொடு" என்று சொல்லி ஏதோ சிற்றுண்டியும் தாகத்திற்கேற்ற பானமும் கொடுப்ப, இரு கைகளாலும் அவற்றை ஏற்றுக்கொண்டு போய் இராசசேகரன் முன் வைத்து அவனை அருந்தச் செய்தாள்.

காவலனே பாவையர்க் கழகு

முந்தித் தன் பெற்றார் "போ தம்பி, போ தம்பி, உன் மாமி வீட்டிற்குப் போ தம்பி" என்று பன்முறை சொன்னாலும் அங்கே போகப் பின்னிட்ட இராசசேகரன் பின்னர்ச் சிலநாட்களாக நாள்தோறும் ஒருமுறை இருமுறை மும்முறையும் போகத் தலைப்பட்டான்; அவன் செயலைக் கண்டு அவனுடைய பெற்றோரும் மாமியாரும் பெரிதும் சந்தோஷமடைந்தனர். தினமும் பின்னேரத்தில் ஞானத்திடமே சிற்றுண்டி அருந்தி வந்தான்; ஞானம்பிகை அவனுடன் ஊடாடிய ஒழுக்கமான நடைசட்டமே அவன்மீது அவனுக்கு அதிக அன்பை ஆக்கிவிட்டது. தான் நினைத்திருந்ததைக் காட்டிலும் பதின்மடங்கு உத்தம குணமும் மேலான ஒழுக்கமும் நாயகபக்தியும் ஞானம்பிகையிடம் இருந்ததை அவன் காட்டிச் செல்லச் செல்லவே அறிந்தான்; மெய்யன்பும் அறிவுகள் கொண்ட உண்மையான துறவு, பெரியோரிடத்தன்ன பெருமதமும் ஒரு [illegible] ஆழ்ந்த கல்வியும் ஆவரவருடன் [illegible] புல்லறைதும் தீண்டாத கற்புக்கு செழுமைத்த [illegible] யன்ன ஞானம்பிகையே தன் இல்லாள் என இராசசேகரன் மனத்தில் வரித்துக்கொண்டான்; ஆனாலும் அவன் சொர்ணம்பிகையை மறந்தானல்லன்; சொர்ணத்திடம் உண்மையாக அவன் சொல்லக்கூடிய குற்றம் யாதுமிலையல்லவா? சொர்ணமும் ஒரு உத்தமகன்னிகை யென்பதை எவர் மறுக்கமுடியும்? [illegible] சொர்ணம்பிகை தனக்குச் செய்த நன்மைகளை யெல்லாம், அவன் ஆதரவாகப் படுத்திருக்கும் போதினில் ஒன்றொன்றாக நினைத்துக் கண்ணீர் விடுவான்; சொர்ணத்திற்கு அன்பான ஒரு கடிதமும் எழுதியிருந்தான்; அக்கடிதம் கிளாக்கரும் மகளும் ஊரிலில்லாமையால் அவர்கள் வீட்டிற் சேர்ந்து வாசிக்கப் படுதலின்றிக் கிடந்தது. இரு கன்னியர்மீதும் காதல் பாராட்டியமையினால் வந்த கவலையைச் சில நாட்களிற்றான் இராசசேகரன் அனுபவித்தான். தான் பள்ளிக்கூடத்திற் போயிருக்கும் காலத்தில் ஞானத்திற்குத் தானே கடிதமெழுதுவதாகச் சொல்லி, அப்பொழுது ஞானமும் பதில் எழுதவேண்டுமென்று கேட்க ஞானம் அதற்கு "ஓம்" என்று உடன்பட்டாள்.

இன்னும் போவதா? ஊருக்கு மீள்வதா?

பாலசிங்கனுக்கு ஆறுமாசக்கடுஞ்சிறை விதிக்கப்பட்டது. "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என பழமொழி பொய்யல்லவா; அவன் சிறைக்கூடத்திலிருந்தான்; இதனைக் கேள்வியுற்ற இரத்தினசிங்கன் அகத்தில் மகிழ்ந்தனனேனும் புறத்தில் கவலை கொண்டான்போல நடித்தான்; [illegible] அவள் உள்ளும் புறமும் மகிழ்ச்சியடைந்தாள்; இனி இரத்தினசிங்கன் தன்னை ஏற்றுக் கொள்ளுவான் என்று எண்ணினாள். [illegible] இவனுடன் பேசி [illegible] இவளமீது வெறுப்புடையனல்லன்; [illegible] காணப்பட்டான்; [illegible] கிளாக்கர் மகளைப் பார்த்து "மகளே எங்கள் பயணம் சொர்ணம், [illegible] நினைக்கத் தெய்வம் [illegible] நினைத்தவாறாய் முடிக்கிறது; [illegible] இனி [illegible] திருப்புவதுதான் மேல் [illegible] உன்னுடைய எண்ண [illegible] புத்தி, [illegible] மென்ன" என்று கேட்க, மகள் "ஐயா, இப்பொழுது எங்களுக்கு வந்த பொல்லாங்கென்ன; நாங்கள் இங்கே வந்தமையினால் ஒரு துஷ்டனைச் சிறைத்தண்டனைக்குள் ஆக்கினோம். ஆனதால் இன்னுஞ் சில நாட்களை மாத்திரம் பார்த்துக்கொண்டு இரண்டு மூன்று தினத்தில் ஊருக்கு மீள்வோம்" என்றாள்; மகள் சொல்லுக்கு மாறாக நடக்க விருப்பமில்லாமையால் கிளாக்கரும் அதற்கு உடன்பட்டார். விடுதிக்காரனுக்குக் கணக்குத் தீர்த்துவிட்டு அன்று பின்னேரம் புறப்படுவதாகக் கிளாக்கர் நிச்சயஞ் செய்துகொண்டார்; தம்முடைய நோக்கத்தை அவர் இரத்தினசிங்கனுக்கும் வெளியிட்டார்; இரத்தினசிங்கன் அதைக் கேட்டு "உங்களைப்போன்ற பெரிய மனுஷருடைய சகவாசம் இனிமேல் எனக்குக் கிடைக்கப்போவதில்லை"யென்று சொல்லிக் கவலைப்பட்டான். இங்ஙனமாக, சொர்ணம்பிகையும் தாங்கள் அன்று பின்னேரம் அவ்விடுதியை விட்டுப் புறப்படுதலாகிய சமாசாரத்தை அந்த மனுஷிக்குச் சொல்ல அவள் விம்மி, விம்மி அழுதாள், "அக்கா, நீர் அழவேண்டாம் நான் இன்னுமொருமுறை ஐயாவிடம் சொல்லி அந்த ஆளையும் உம்மையும் சமாதானப்படுத்தி விடும்படி கேட்கிறேன்" என்று சொர்ணம் சொல்ல அவள் சிறிது ஆறியிருந்தாள்; சொர்ணம் தன் தகப்பனிடம் போனாள்; அங்கே தகப்பனுடன் பேசிக்கொண்டு நின்ற இரத்தினசிங்கன் சொர்ணத்தைக் கண்ட மாத்திரத்தே மரியாதையாக ஒதுங்கிக்கொண்டு "பிறகு காணுகிறேன், ஐயா" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான். "பாவம், ஐயா, அந்த அக்காவைப் பார்க்கப் பரிதாபமாகவிருக்கிறது; இனி அந்த மனுஷி ஒரு பிழையும் செய்யமாட்டாதாம்; இந்த ஆளிலும் சிறிது குற்றம் இருக்கிறதுதானே; நீங்கள் இந்த ஆளுக்குச் சொல்லி இருவரையும் சமாதானமாக்கி விட்டால் பெரும் புண்ணியம்" என்று இரக்கத்துடன் கேட்க, "மகளே, அதைப் பற்றித்தான் அவருடன் பேசிக்கொண்டு நின்றேன்; அந்த வாலிபன் பாலசிங்கனைப்போன்ற ஒரு அயோக்கியனல்லன்; இயல்பில் நல்லவன், பிறகு தீய சகவாசத்தாற் கெட்டுப் போயவிட்டான்; தான் செய்த குற்றங்களுக்காகப் பச்சாத்தாபப்படுகிறான்; இந்த மனுஷி தனக்குப் பெருந்துரோகஞ் செய்துவிட்டதாக அந்த வாலிபன் இப்பொழுது எனக்கு முறையிட்டுக்கொண்டு நின்றான்; இதற்கிடையில் நீ வரக் கண்டு இங்கு [illegible] ணுதென நினைத்துக்கொண்டு போய்விட்டான், உன்னைக் காணக் கூசுகின்றான்; இந்தவிஷயத்தில் என்ன செய்யலாம், எனக்கு ஒன்றும் தெரியவில்லை; அந்த மனுஷியைப் பார்க்கவும் பரிதாபமாகத்தான் இருக்கின்றது" என்று சொல்லிக் கவலைப்பட்டார் கிளாக்கர். "அந்த ஆள் நல்ல யோக்கியனென நீங்கள் மதிக்கிறீர்களா" என்று மகள் கேட்க, தகப்பன் "அவன் யோக்கியனென்பதில் எனக்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை, மகளே" என்றார். "அப்படியானால் நான் அந்த ஆளிடம் ஒருமுறை சொல்லிப்பார்க்கட்டுமா" எனப் புதல்வி கேட்க "ஆம், மகளே நீ சொன்னால் அவர் ஒருபோது உடன்படவுங் கூடும்" என்று சொல்ல, தூய சிந்தையுடையவளாகிய சொர்ணம் "ஐயா, தயவுசெய்து அந்த ஆளை இங்கே வரும்படி கூப்பிடுகிறீர்களா" எனலும் "ஓம் மகளே கூப்பிடுகிறேன்" என்று சொல்லிக் கூப்பிட "ஐயா, வந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டு இரத்தினசிங்கன் அங்கே விரைந்து வந்தான். "உம்மை, தங்கைச்சி காண விரும்புகிறாள்" என்று கிளாக்கர் சொல்லவே, சொர்ணம் முற்பட்டுவர இரத்தினசிங்கன் பயபக்தியோடு ஒதுங்கி நின்றான் "என் அக்கா இனியுங்களுக்கு ஒருதுரோகமும் செய்யமாட்டாள்; ஆனதால் அவள் செய்த அபராதங்களையெல்லாம் பெரிய மனசுபண்ணிப் பொறுத்துக்கொண்டு அவளை ஏற்றுக்கொள்ளுங்கள்; அப்படியேதும் தவறு இனிச் செய்தால் நான் பொறுப்பு. நான் உங்களைக் கேட்டதற்காக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று மரியாதையுடன் சொன்னாள். இரத்தினசிங்கனால் ஏதும் மறுத்துப் பேச முடியவில்லை; "அம்மா, நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன், எல்லாம் விதியின்படி நடக்கும்" என்று சொல்ல, சொர்ணம் அவளைக் கூப்பிட்டு "அக்கா, நீங்கள் அவரைப் பொறுதி கேளுங்கள்; அவர் உங்களை ஏற்றுக்கொள்ளுவார்" என்று சொல்ல அந்தப்பெண் அப்படியே உடனேபோய் அவனுடைய காலில் விழுந்து கும்பிட்டுப் பொறுதி கேட்க, அவன் அவளை அன்புடன் ஏற்றுக்கொண்டான்; கிளாக்கரும் சங்கரனும் அந்த விடுதியில் அந்த வேளையில் நின்றோரெல்லோரும், சொர்ணத்தைப் பாராட்டி அவ்விருவரும் சமாதானப்பட்டமையை யிட்டுச் சந்தோஷப்பட்டனர்; அன்று பின்னேரம் 3 மணிவரையில் அவர்கள் எல்லாரிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு பிரிந்து கூடிய தம்பதிகளுக்கும் வேண்டிய புத்தி சொல்லி விட்டுச் சொர்ணமும் தகப்பனும் சங்கரனுந் [illegible] புறப்பட்டுப் போவாராயினர்; அன்று பொழுதுபட இரத்தினசிங்கன் தன் மனைவியையும் கூட்டிக்கொண்டு தன் வீட்டிற்குப் போனான். (வரும்.)

பட்டப்பகலிற் செட்டியாரிடம் கொள்ளை

கண்ணுள் மூக்குத்தூளைச் சிந்தி வழிப்பறி செய்தனர்

எதிரிகளுள் ஒருவர் கைது

சென்ற திங்கட்கிழமை யன்று புறக்கோட்டையில் திடுக்கிடக்கூடிய விதத்தில் ஒரு துணிகரக் கொள்ளை நடைபெற்றது. ஆயுதந்தாங்கிய ஒரு கூட்டத்தார் ஒரு செட்டியாரிடமிருந்து ரொக்கமாக 6690 ரூபாவும் ஏறக்குறைய 9000 ரூபா விலைமதிப்புள்ள 31,000 ருத்தல் றப்பர்க் கூப்பன்களும், கையொப்பமிடப்பட்ட 35 செக் தாள்களுள்ள ஒரு செக் புத்தகமும் அடங்கிய ஒரு பையை அடித்துக் கொண்டுபோய்விட்டனர்.

மேற்படி செட்டியாரின் பெயர் ஏ. வி. சுப்பிரமணியஞ் செட்டியார். அவர் எஸ். பி. எஸ். சொக்கலிங்கஞ் செட்டியார் கொம்பனியில் காஷியராக வேலை பார்ப்பவர். தினசரி காலையில் அவர் செட்டியார் தெருவிலிருந்து மலிபான் வீதியிலுள்ள ஒரு காரியாலயத்திற்கு ரொக்கப் பணமும், கூப்பன்களும் கொண்டு வருவார். மாலையில் அன்று கிடைத்த வருமானத்துடன் அவர் செட்டித்தெருவுக்குத் திரும்பிப் போவது வழக்கம்.

கத்திமுனையிற் பயமுறுத்தல்.

திங்கட்கிழமை காலையில் அவர் வழக்கம்போல் றிக்ஷோவில் 2-ம் குறுக்குத்தெரு கொறிஸ்றோட்டுச் சந்திக்கு வந்துசேர்ந்தார். அப்பொழுது நேரம் காலை ஏறக்குறைய 8-30 மணி இடையென்று கத்திகளைத் தாங்கிய இருவர் அங்கு தோன்றி றிக்ஷோவை நிறுத்தினர். உடன் அவ்விருவரும் கத்திமுனையிற் பயமுறுத்திச் செட்டியாரின் கையிலிருந்த பணப்பையைக் கைப்பற்றிக்கொண்டனர். செட்டியார் சண்டையிட்டபொழுது அவரது கண்களில் மூக்குத்தூள் வீசப்பட்டது. கொள்ளைக்காரர்கள் அருகிற் காத்து நின்ற ஒரு காருக்குட் பாய்ந்தனர். அந்தக் காருக்குள் இந்த இருவரைத் தவிர, மற்றும் மூவர் உட்கார்ந்திருந்தனர், அவர்கள் பணப்பையுடன் காரில் ஏறிக்கொண்டு மறைந்து விட்டனர்.

செட்டியாரின் பைக்குள் 10 ரூபா நோட்டுக்களும் 5 ரூபா நோட்டுக்களுமாக 6 கட்டுக்களும் 690 ஒரு ரூபா நோட்டுக்களடங்கிய ஒருகட்டும் இருந்ததாகக் கூறப்படுகிறது. செக் புத்தகம் சாட்டேட் வங்கியிலிருந்து பெறப் பட்டதாகும். குறித்த புத்தகத்திலுள்ள செக் தாள்களில் "எஸ். பி. எஸ். சொக்கலிங்கம் அன் கோ" என்ற 'றப்பர் சீல்' குத்தப்பட்டிருந்ததோடு எஸ். பி. எஸ். சொக்கலிங்கஞ் செட்டியார் என்பவர் தமிழிற் கையொப்பமும் வைத்திருந்தார்.

வர்த்தக ஸ்தலத்திற்குச் சென்றபோது, அன்றைய கொடுக்கல் வாங்கற்காரியத்திற்காகக் கொம்பனி முதலாளி செக் புத்தகத்திலுள்ள தாள்களிற் கையொப்பம் வைத்துக் கொடுப்பது வழக்கமென்று கூறப்படுகிறது.

கோடிப்பொழுதிற் கொள்ளை.

மேலேகூறப்பட்ட பகற்கொள்ளை சில விநாடி நேரத்திற்குள் நடந்தது. அவ்வழியாகச் சென்ற சிலர்தாமும் இக் கொள்ளையைப்பற்றிய விபரீதம் அறிந்து கொள்ளுவதற்கு முன்பு, கொள்ளைக்காரர்கள் காரில் ஏறிக்கொண்டு ஓடித்தப்பினர்.

காருக்குள்ள கள்ள இலக்கம்.

காரின் இலக்கத்தை அந்தச் செட்டியார் குறித்துக்கொண்டார் என்றும் காரின் வர்ணம் பச்சையாக இருந்ததென்றும் அறிவிக்கப்பட்டது. செட்டியார் குறித்துக்கொண்ட இலக்கம் "ஏ 5171" பொலிசார் இந்த இலக்கத்தைப் பற்றி "மோட்டர் றிஜிஸ்ட்ரார்" இடம் விசாரித்தபோது அது பொய் இலக்கம் என்று தெரியவந்தது.

செட்டியார் குற்றப் பொலிசாருக்கு டெலிபோன்மூலம் செய்தி அறிவித்தார். பொலிசார் இக் கொள்ளையைப்பற்றிப் புலன் விசாரித்து வருகிறார்கள்.

ஒருவர் கைது.

இக்கொள்ளையையொட்டிப் புறக்கோட்டை வாசியாகிய ஆர்தர் என்பவர் உருகொடவத்தையிற் கைது செய்யப்பட்டார். கொள்ளை நடந்த சிறிது நேரத்திற்குப்பிறகு அவர் உருகொடவத்தையிற் சந்தேகத்திற்கிடமான நிலைமையில் அலைந்து கொண்டிருப்பதை ஒரு கொன்ஸ்டபிள் கண்டு அவரை விசாரித்தபொழுது அவர் திருப்திகரமான பதில் கூறவில்லை. உடனே அவர் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டார். அப்பொழுது அவரிடம் ரூபா 1305 கண்டுபிடிக்கப்பட்டது.

சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்கு உதவிபுரியுங்கள்!

இலங்கையில் மிகப்பெரிய சைவக்கல்வி ஸ்தாபனம் இதுவே.

16 வருஷங்களிலேயே, இதன்கீழ் 16,000மாணவர்கள் கற்கும் 480 ஆசிரியர்கள் கற்பிக்கும் 97 ஸ்தாபனங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சைவப்பெண்கள் அநாதசாலை, யாழ்ப்பாணம் சைவ ஆண்கள் அநாதசாலை, யாழ்ப்பாணம் காவிய பாடசாலை, (தமிழ், சமஸ்கிருதம், சிங்களம்) யாழ்ப்பாணம் சிங்கள இராப்பாடசாலை, யாழ்ப்பாணம் சைவாசிரியகலாசாலை, 2 ஆங்கிலவித்தியாசாலைகள், 5 தனிபாஷா பாடசாலைகள், 85 தமிழ்ப்பாடசாலைகள் ஆகிய இவற்றை இந்த ஸ்தாபனம் நடத்திவருகின்றது.

ரூபா. 100 கொடுக்கும் ஒவ்வொரு சைவாபிமானியும் சீவியகால அங்கத்தவராகின்றனர்.

ரூபா 10 கொடுக்கும் ஒவ்வொரு சைவாபிமானியும் ஒரு வருஷத்துக்கு அங்கத்தவராகின்றார்.

(Mis. 279. 12-2—11-4-40)

பதின்மரைப் பட்சித்த முதலை

அம்பாந்தோட்டை, பெப். 25உ

சிறிதுகாலமாக வலவைகங்கையாற்றில் அட்டகாசஞ்செய்துவரும் முதலை ஒன்று சேற்றுஅந்தஆற்றிற் குளித்துக்கொண்டிருந்த ஒருபெண்ணை இழுத்துக்கொண்டுபோய்விட்டது. ஏற்கெனவே அந்தமுதலைக்கு ஏறக்குறைய 10 பேர்வரை பலியாகிவிட்டனர். எவ்வளவோ சிரமப்பட்டுத்தேடியும் இந்த முதலையைக்கண்டுபிடிக்கவில்லை. அதைச் சுட்டுக்கொல்லுவோருக்கு 15ரூபா வெகுமதி யளிப்பதாகக்கூடச் சில மாதங்களுக்குமுன் விளம்பரப்படுத்தப்பட்டது.

காரைநகர்வியாவிற் சைவபரிபாலன வித்தியாசாலை

இவ்வித்தியாசாலையின் மாணவர்களது சமயத்திலேயும் கல்வியிலேயும் அபிவிருத்தி செய்வதற்குப் பெற்றார் ஒத்துழைப்பு இன்றி அமையாததெனவுணர்ந்து [illegible] பிரமாதி௵ மாசிமாதத்தில் ஸ்ரீமத் சி. சுப்பிரமணியதேசிகர் அவர்கள் தலைமையில் ஆசிரியர் திரு. மு. மயில்வாகனம் அவர்களும் திருப்புகழ் கா. சுப்பிரமணியம் அவர்களாலும், பண்டிதர் M இராமசாமி அவர்களாலும், திரு. [illegible] இரத்தினம் சேவாசிரியர் அவர்களாலும் முறையே சமயக்கல்வி, திருப்புகழ், சைவமும்தமிழும், கைத்தொழிற்கல்வி என்னும் விஷயங்களிற் பிரசங்கம் செய்விக்கப்பெற்றன. இப்படியாக மேலும் பிரசங்கவரிசை பெற்றோர்கள் [illegible] பிள்ளைகள் சிறப்புறையில் வளர்க்கத்தக்கதா எல்லாம் வல்ல இறைவனின் இன்னருள் முன்னிற்குமாக, சுபம்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்,'

[illegible]

குரு லிங்க சங்கமம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"உடையா ளுன்ற னடுவிருக்கு
முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவிரு மிருப்ப
தானா லடியேனுன்
அடியார் நடுவுளிருக்கு மருளைப் புரி
யாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடி
யும் வண்ணம் முன்னின்றே"

எனவும் அடியார் கூட்டத்தின் இன்றியமையாமையை விளக்கியருளினர். பட்டினத்தடிகளும்,

"நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமு ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ..."

எனக்குருலிங்க சங்கமசேவை இன்றியமையாத தெனக் கூறியருளினர். சங்கமமெனப்படும் சிவனடியார்கள்

"மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னால்எத் திசையும் விளக்கினார்
பேச வொண்ணாப் பெருமை பிறங்கினார்"

"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓதுகாதல் உறைப்பின் நெறிநின்றார்
கோதிலாத குணப்பெருங் குன்றனார்"

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்."

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ"

"வேண்டும் ஆறு விருப்புறும்" வேடத்தர்
தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்
நீண்டதொல்புகழார்தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்னறித் தேத்துகேன்"

நீண்டதொல் புகழு உடையவர் ஆதலால்இத்தன்மைத்தென்று, அளவிடற்கரிய பெருமையுடையவர் என்று சாலவிதந்து சொற்களாகிய தனிக்கருவிகளை எடுத்துக் கொடுக்கத் திருவருள், சரிதையை விளக்கத் திருவருளின் நிலைநின்று பாடியருளிய சேக்கிழார் பெருமானே திருவாய்மலர்ந்தருளினாராயின் எம்மனோர் கூறப்புகின் இயைவதொன்றாகுமா! அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

சிவநேசச் செல்வர்காள்! ஆன்மாக்கள் அறிவித்தாலன்றி அறியாவாதலால் ஞானாசிரியனது ஞானோபதேசம் இன்றியமையாததென்பதுடம், அங்ஙனம் ஞானோபதேசம் பெற்றச் சிவன் முத்தராய வழியும் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடையராதலால் இலிங்க சங்கம வழிபாடு இன்றியமையாததென்பதுவும் பெற்றாம். ஆதலின், நாமெல்லாமும் குருலிங்க சங்கம வழிபாட்டைக் கடைப்பிடித்துக் கடைத்தேறுவோமாக.

சற்குருநாதன்
நற்பதத்துணை,
திருச்சிற்றம்பலம்.

பெண்ணின் பெருமை

முதலாம்பக்கத் தொடர்ச்சி

தான், இவ்வித வீர சிகாமணிகள் நிறைந்த பெண் சமூகம் ஆண் மக்களுக்குத் தாழ்ந்தவர்கள் தாங்கள் என்று எண்ணி ஏங்கவேண்டியதில்லை. மேற்குறித்த ஸ்திரீயைப்பற்றி நான் நினைக்கும்போதெல்லாம் ஸ்திரீகள் விஷயத்தில் எனக்குப் பெருமை ஏற்படுகிறது. இவ்வித நிலைமை இருக்கையில் ஆண்மக்கள் தாங்கள் ஏன் பெண்களாகப் பிறக்கவில்லையென்றும் நினைக்கிறார்கள். ஆனால், அவரவர்களுக் கேற்ற விடத்தில் இருந்து அவரவர்களின் தொழிலை நடத்திச் செல்வதில் உள்ள ஆனந்தம் வேறு எதுவுமில்லை.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள் சிமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரூப்மைட்டீ"
K. A. இரத்தினசிங்கம்
Y 50. 3-4-39 3-3-40

மனித நூல்

(Anthropology)

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

(Copy Right)

(முற்றொடர்)

பலவேறு மக்கட் கூட்டத்தினர் தம் சாதியினர் தம் ஆதிகாலக் காட்டுமிராண்டித்தனமானவாழ்க்கை படிப்படியாக வளர்ச்சியடைந்து திருத்தமடைந்த முறையினை ஆராய்ந்து கூறும்நூல் மக்கள்இனநூல் எனப்படுகிறது.

மக்கள்இனநூலார் உலகத்தின் எல்லாப்பாகங்களிலுமுள்ள மக்களின், பிரதானமாகக் காட்டுமிராண்டிச் சாதிகளின் விநோதமான பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் பற்றி ஆராய்ந்து கூறுகின்றனர். உலகம்முழுமையிலும் பார்த்துக் காணப்படும் கொள்கைகளுக்கு ஒருபொதுவான அடிப்படை இருப்பதையும் அவர்கள்காட்டுகின்றனர். மக்கள் நூல், மக்கள் இனநூல், மொழிநூல், தேயநூல், புராதனகலைஆராய்ச்சி, பூமிசாத்திரம், சரித்திர அறிவின் பலபகுதிகள் என்பன மக்கள் இன நூலோடுபின்னிக்கிடக்கின்றன.

மக்கள்இனநூல் என்னும் கலை 19ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கலையை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். ஒன்று இதுவரையில் காணப்படுகிற நாகரிகமில்லாத சாதிகளின் உற்பத்தி, பிதாப்புத்திரசம்பந்தம், பழக்க வழக்கங்கள் கொள்கைகள் ஆகியவற்றை ஆதாரங்களுடன் ஆராய்தல், மற்றது சரித்திரகாலத்துக்கு முற்பட்ட மனிதனின் நிலைமையை ஆராய்தல். இவ்வாராய்ச்சி அநுமான அளவினதேயன்றித் தீர்மானமானதன்று. மனிதசமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதன, உலகசம்பந்தம், குடும்பம் சமுதாயம், அறிவு, சமயம், ஒழுக்கம் என்பன.

மனிதவிவேகத்தைக்குறிக்கும் சான்றுகள் இன்றுபோலவே என்றும் இருந்திருக்கின்றன. இக்கொள்கையை மனிதநூலார் தமது ஆராய்ச்சிக்கு அடிப்படையாகக்கொள்வர். தனிப்பட அறிவிலிருந்து பலவும் கலந்தஅறிவை மனிதன் விருத்தி செய்தான். இவ்வுலகின் பலபாகங்களிலுமுள்ள மக்கட்கூட்டங்கள் ஒரு உற்பத்தியையோ பலஉற்பத்தியையோ உடையனவாயினும் அவை ஒரே போக்கில் முன்னேறி வந்திருக்கின்றன என்று கூறமுடியாது. சிலசாதிகளின் முன்னேற்றம் தடைபட்டிருக்கலாம். சிலசாதிகள் பின்னோக்கிச் சென்றுகொண்டிருந்திருக்கலாம்.

மனிதனுடைய உற்பத்தி எவ்வாறிருந்தபோதும் மக்கட்பிரிவுகளின் வேற்றுமைகளிலும் ஒற்றுமையே அதிகம் காணப்படுகின்றது. மனிதனின் நாகரிகமும் மனிதவளர்ச்சிப்பருவத்தைப்பொறுத்திருக்கின்றன. நாகரிகம் மனிதவளர்ச்சியின் பக்குவகாலமும், அநாகரிகம் அதன் குழந்தைப் பருவமுமாகும். இக்கால அநாகரிக மக்களின் நிலைமை நமது முன்னோர் ஒருகாலத்தில் இருந்த நிலைமையேயாகும். அநாகரிகவாழ்க்கையிலுள்ள பலபிரிவினரைப் பார்க்கும் சாதாரணஒருவனுக்கு எல்லோரும் ஒருவகையினராகவேகாணப்படுவர். நாகரிகசாதியாரோடு அநாகரிகசாதியாரை ஒப்பிட்டுப்பார்க்கும் ஒருவருக்கு அவர்களுக்கிடையிலுள்ள வேற்றுமை எளிதில் தோன்றும்.

அவர்கள்ஒரேகாலத்தில்வாழ்பவர்களாயினும் அவர்கள் தாழ்ந்தநிலைமையிலிருந்து இப்போதையநிலைமையை அடையப் பலநூற்றாண்டுகள் பிடித்திருக்கும். சரித்திரகாலத்துக்குமுற்பட்ட விஷயங்களை அறிவதற்கு அநாகரிக நிலைமையிலுள்ள தேசங்கள் உதவிபுரிகின்றன. காலங்கள் மறைந்து போயினவென்று மறந்திருக்கும்பொருள்களை அறிவதற்குப் பொருட்காட்சிச் சாலைகள் உதவிபுரிகின்றன.

மக்கட்கூட்டங்களுள் பழமையை ஆராய்வோர் சரித்திரசம்பந்தமான இடங்களை அகழ்ந்து மனிதனின் எலும்புகளையும் அவர்கள் உபயோகித்தபொருள்களையும் எடுத்துப் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். இவை அவர்களுக்கு மிகவும் உபயோகமான விஷயங்களைத் தெரிவிக்கின்றன. அவர்கள் பாதிராசிக மடைந்த தேசங்களுக் கூடாகப் பிரயாணஞ்செய்யும்போது சேகரிக்கக்கூடியனவும்அறிந்து கொள்ளக்கூடியனவும் பலவாகும்.

மனிதன் அடைந்த உலகமுன்னேற்றங்களில் பிரதானமானவைஉணவுசேகரிக்கும்முறை,உணவின்தன்மை, சமைக்கும் முறை, ஆயுதங்கள், கருவிகள், வீடு, உடை, நெருப்புண்டாக்குதல், கைத்தொழில் என்பன.

உணவு:—மனிதன் பசியையும்தாகத்தையும் தீர்ப்பதற்கு உணவும்தண்ணீரும் கும்பெறும்விடின் மிருகங்களைப்போல அவற்றைத் தேடியலைகிறான். ஆகாரத்துக்கு வேண்டியனகிடைத்தால்மகிழ்ச்சியடைந்து ஒருஇடத்தில் இருக்கிறான். உணவின்பொருட்டு ஒவ்வொரு மனிதக்கூட்டத்தினரும் கடந்த அல்லது கடக்க வேண்டியபடிகள் ஏழு.

அவை:—வேட்டையாடலும், மீன்பிடித்தலும், ஆடுமாடுவளர்த்தல் பயிரிடுதல் கைத்தொழில் என்பன. இவை உணவுதேடும் பொருட்டு மனிதன் ஒன்றின்பின்ஒன்றாகக் கையாளும் முறையேயன்றி வேறல்ல இத்தொழில்கள் எல்லாவற்றின் நோக்கமும் ஆரோக்கியத்துக்கு அல்லது ஒவ்வொருவனுக்கும் நல்லஉணவைத் தேடுதலாகும்.

சிந்துநெருக்கடி

தலைவர்களுக்குமீண்டும் கவர்னர்அழைப்பு

ஹிந்துசுயேச்சைவாதிகள் லீக்ஒற்றுமை

கராச்சி, பிப் 17

முஸ்லிம் லீக் கட்சித்தலைவர் கான்பகதூர் குர்ரோவையும் ஹிந்துசுயேச்சைக் கட்சித்தலைவர் ஸ்ரீ நிச்சலதாஸ் வஸிராணியையும் கவர்னர் திங்களன்றுகாலை தம்மைச்சந்திக்கும்படி அழைத்திருக்கிறார்.

எட்டுப்பேர்களடங்கிய மீர்கோஷ்டியும் ஒன்பது அங்கத்தவர்கள் கொண்டலீக்கட்சியும் பதினைந்துபேர்களடங்கிய ஹிந்துசுயேச்சைக்கட்சியும் ஒன்றுசேர்ந்து மந்திரிசபையை அமைக்கலாமென இப்போழுது ஒரு யோசனை இருந்துவருகிறது. மூன்று ஐரோப்பிய அங்கத்தவர்களும் இவர்களுடன் சேர்ந்துகொள்வர்.

ஜனக்கட்சி

கராச்சி, பிப்18

லீக் அங்கத்தவர்கள் ஹிந்துசுயேச்சை வாதிகளுடன் சேர்ந்து ஜனக்கட்சி ஒன்றை அமைக்கத் தயாராக இருக்கிறார்கள். இக்கட்சியிற் கட்டுப்பாடு அதிகமாக இருக்க வேண்டுமென உத்தேசிக்கப்படுகிறது. தவிர, நல்லெண்ணத்தின் அறிகுறியாகப் பிரதமமந்திரியைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பை ஹிந்துக்களுக்கே விட்டுவிடவேண்டுமெனவும், மற்றமந்திரிகளை அவரேதெரிந்து கொள்வதென்றும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது

அல்லாபக்ஷ்மனோபாவம்

ஹிந்துக்களின் உணர்ச்சிக்கு அல்லாபக்ஷ் மரியாதை காட்டுகிறாராயினும் கொள்கைவிஷயத்தில் அவர் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. தம்மை விட்டுவிட்டு லீகில்போய்ச் சேரமாட்டார்களென அவர் உறுதியாகஇருக்கிறார்.

சர்அப்துல்லாவிஜயம்

சர் அப்துல்லா ஹரூன் இன்று காலை வந்து சேர்ந்து விவாதங்களிற் கலந்துகொண்டார். கூட்டுமந்திரி சபைகளை அமைப்பதை லீக்ஆதரிப்பதாகவும், சிந்துமாகாணத்தின் நிலைமை அதற்கு அனுகுணமாக இருந்தால் கூட்டுமந்திரி சபையை அமைப்பதில் எவ்விதக் கஷ்டமும் இருக்குமெனத் தமக்குத்தோன்றவில்லையென்றும் அவர் பத்திரிகை நிருபரிடம் கூறினர்.

ராம்கார்காங்கிரஸ்

அலங்காரத்துக்கு ஏற்பாடு

ராம்கார், பிப்'15

ராம்கார் காங்கிரஸ் நகர் அலங்காரத்துக்காகப் பலவிடங்களிலிருந்து நிபுணர்கள் வந்திருக்கிறார்கள். சித்திரக்கலாசாலைகளில் நல்லபயிற்சி அடைந்த பலர்இங்குவந்து அலங்காரவேலைகளைக் கவனித்து வருகிறார்கள். ஸ்திரீதொண்டர்கள் பயிற்சி வேலையும் மும்முரமாக நடக்கிறது. ஸ்ரீமான் ஜெயப்பிரகாசநாராயணர் மனைவியாகிய ஸ்ரீமதி பிரபாவதி 14 ஸ்திரீதொண்டர்களுடன் இங்குவந்து சேர்ந்தார்.

அரசடிப்பிள்ளையாரின் அங்கி திருட்டுப்போயிற்று

வண்ணார்பண்ணைப் பெருமாள் கோவிலுக்கு முன்னாலிருக்கும் அரசடிப் பிள்ளையார் கோவிலிலுள்ள பிள்ளையாரின் ரூபா 200 அல்லது ரூபா 250 வரைபெறுமதியுள்ள வெள்ளியாற் செய்யப்பட்ட அங்கியை நேற்றுஇரவு கோவிலின் கிழக்குப் பக்கத்துக்கதவிற்குக் கள்ளத்திறப்புப் போட்டுத்திறந்து உட்புகுந்து யாரோதிருடிச்சென்று விட்டதாக அறியக்கிடக்கிறது. ச. சி.

ஆயுதங்கள்:—மக்கட் கூட்டங்களின் பழமையை ஆராய்வோர் உலகின் பலகோணங்களிலுஞ் சென்று பழையகால மட்பாண்டத் துண்டுகள், எலும்புகள், பல்லுகள், கீர்சுட்டிக்கல்லுகள் முதலியவற்றை எடுத்திருக்கின்றனர். ஆயுதங்களின் திறமைக்கேற்பவே வேலைகளும் இருக்கும். ஆயுதங்களையும் வேலையையும் கொண்டு மனிதனின் நிலைமையை அறிதல்கூடுமானது. மனிதன் ஆயுதங்களைச்செய்யும் அல்லது உபயோகிக்கும் மிருகம். உணவின் பொருட்டு விலங்குகளைக்கொல்ல ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டன. ஆயுதம் சல்லாமிருப்பின் ஒழுங்காக உணவுகிட்டும். உணவுமாறுபட்டால்ஆயுதங்களும் வேறுபடும். ஆதியில் மரம் எலும்பு முரடானகல்லு என்பன ஆயுதங்களாக உபயோகிக்கப்பட்டிருந்தன. பின்அழுத்தமான கற்கள் உபயோகிக்கப்பட்டன. இதன்பின் வெண்கலமும் இரும்பும் ஒன்றன்பின் ஒன்றாக உபயோகிக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதியகாலத்தை உண்டுபண்ணின ஒருகாலம்முடிந்து இன்னொருகாலம் ஆரம்பிப்பதற்கு எல்லைவகுத்துக்காலம்பிரிக்குமென்று தீர்மானித்துக் கூறமுடியாது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பொன்விழா.

ஒருலக்ஷம் ரூபா நிதிக் கணக்குப்போட்டி

முதலாம் பரிசு புது ஒஸ்டின் சலூன் கார்

(விதிகளும் செய்யும் வகையும்)

கூப்பன்களிலுள்ள சதுரக்கக் கோடுகளில், மேல்கீழாகவும், வலம் இடமாகவும் ஒரு மூலையிலிருந்து எதிர்மூலையாகவும் கூட்டும்போது (பொன்விழா இலக்கமாகிய) **50** என்னும் இலக்கம் பெறக்கூடியதாக 5 முதல் 20 வரையுள்ள இலக்கங்களை ஒழுங்குபடுத்தி நிரப்புக.

ஓர் இலக்கத்தை ஒருமுறைதான் போடலாம். நிரப்பும்போது மையால் தெளிவாக எழுதுக. அழித்து எழுதப்பட்ட இலக்கங்களையும் ஒருமுறைஎழுதிப் பின்னர் மாற்றிஎழுதப்பட்ட இலக்கங்களையுமுடைய கூப்பன்கள் தகுதியற்றவை என்று தள்ளப்படும்.

போட்டியிற் கலந்து கொள்வோர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம். பொன்விழாக் கொண்டாட்டக் காரியநிருவாகசபை அங்கத்தவர்கள் இப்போட்டியிற் பங்குபற்ற உரித்துடையவரல்லர். புனைபெயர்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

எல்லாக் கூப்பன்களும் 1940ம் ஆண்டு நவம்பர்மீ 30-ந் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியருக்குத் திருப்பியனுப்பப் படுதல் வேண்டும். அவை, இடதுபக்க மேல் மூலையில் "கூப்பன் போட்டி" என்று குறிக்கப்பட்ட என்வலப்புகளுள் வைத்து அனுப்பப்படவேண்டும்.

இப்போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

பரிசுத் தெரிவு.

இந்தக் கணக்குக்குச் சரியான விடைகள் பல உண்டு. ஆதலால், கூப்பன்கள் அனுப்பினோரின் விடைகள் எடுக்குமுன் சரியான எல்லா விதமான விடைகளையும் எழுதி ஒட்டி, வேறோர் இடத்தில் போட்டுக் கலந்து, அவைகளில் ஒன்றை மத்தியஸ்தர் முன்னிலையில் தெரிந்தெடுக்கப்படும். அப்படி முதலில் எடுக்கப்பட்ட விடைக்கு எல்லாவிதத்தாலும் ஒத்திருப்பதே சரியான பரிசுக்குரிய விடையாகக் கொள்ளப்படும்.

அதன்மேல், முறையே அப்படிச்சரியான 25 விடைகள் திருவுளச்சீட்டெடுப்பது போல் எடுக்கப்படும். இவற்றில் முதலாவது பெறப்படும் சரியானவிடையை அனுப்பினோர் முதலாவது பரிசாகிய ஒஸ்டின் கார் ஒன்றைப் பெறுதற்குரியர். மற்ற 24 சரியான விடைகளையும் அனுப்பினோர் தனித்தனி 50 ரூபாய் பரிசைப் பெறுதற்குரியர். முன்னரே தெரிந்தெடுக்கப்பட்ட விடைக்குச் சரியானவிடை, அனுப்பப்பெற்ற கூப்பன்களில் ஒன்றிலேனும் கிடைக்காவிட்டால், அதனை விடுத்து, கூப்பன்களில் முதலாவதாக எடுக்கப்படும் எந்தச் சரியான விடையையும் அனுப்பினோரே முதற்பரிசுக்குரியர். அவ்வாறே அதன்பின், முறையே எடுக்கப்படும் 24 சரியானவிடைகளையும் அனுப்பினோர் மற்ற 24 பரிசுகளையும் பெறுதற்குரியர்.

☞ கூப்பன்கள் இந்துக்கல்லூரியில் விற்கப்படும். (விலை ரூ. 1.)

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைச் சுகப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன் ஆதலால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸலி, கப்பேமுத்விலி, பிஸ்தால், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, காசப்பு, லங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், தபகாந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாய், இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், வைசூர்காத்தல், வலி, ஆடிப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் சூதகவாயு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா **20.** அரைருத்தலுக்கு ரூபா 10 கால்ருத்தலுக்கு ரூபா5 தபாற்செலவுபிரத்தியேகம் சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை
ஸ்ரீ. சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை,
வீட்டிலக்கம்33 பழையவாடிரோட்டு,கோட்டைமுனை,மட்டக்களப்பு,சிலோன்.
(Y 14-6-39 to 31-12-39)

இந்துசாதனப் பொன்விழா மலர்கள்

இவ் வெளியீடுகள் சில பிரதிகள் மாத்திரம் ஆங்கிலத்திலும் தமிழிலும் விலைக்கிருக்கின்றன. தமிழ் மலரில் சிறந்த அறிஞரால் எழுதப்பெற்ற செய்யுள் நடையிலும் வசன நடையிலுமாக 31 விஷயங்கள் உள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பாரிய மரணசாதனவழக்கு முதலிய பழைய வரலாறுகளும், "ஒன்றான் சொல்லுகிறேன்" என்பது முதலிய சில கதைகளும், இந்துப் பெண்களின் இலட்சியம் முதலிய அரிய வியாசங்களும் உள்ளன. ஆங்கில மலரிலும் சிறந்த ஆசிரியர்கள் வரைந்துதவிய அரிய வியாசங்கள் உள்ளன.

வர்ணப் படமும் சித்திரங்களும் பிரதிமைப்படங்களும் இயற்கைக் காட்சிகளும் இரு வெளியீடுகளிலும் விரவியுள்ளன. பிரதிகள் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் நயமான அட்சரங்களினால் தெளிவாக அச்சிட்டு, நீடித்த காலம் நின்றுதவக்கூடிய பொன்னிறமான தடித்த கடிதத்தில் முகப்பழகுற அச்சிடப்பெற்று வனப்புவாய்ப்பக் கட்டப்பட்டுள்ளன.

தனித்தனி பிரதி விலை ரூபா 1, முத்திரைச் செலவு சதம் 15. ஆங்கிலப்பிரதியும், தமிழ்ப்பிரதியும் ஒருங்குவாங்குவோர் 2 ரூபா மாத்திரம் அனுப்பினால் முத்திரைச்செலவு எங்கள் பொறுப்பாக பிரதிகள் அனுப்பப்படும்.

மனேஜர்,
இந்துசாதனாலயம்,
(வண்ணார்பண்ணை Ceylon)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்ற அடைவுபிடிக்குந் திரிகோணமலை 8ம் தெப்பர் காசுக்கடைவீதி வெற்றிவேலு கனகசபை சிவப்பிரகாசம்பிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

இல	கூ	ரு	ச	நகைகளின்விபரம்
1938-ம் ௵ 8ம் மாதம்				
73	3	32		கல்மோதிரம்1 கலி கலாவளைமோதிரம்1
89	5	10		வெகல் காதோலை சோடி 1
103	5	50	04	வெ கல் பெண்டனுடன் சங்கிலி1 தாக்கம் 2 இ
137	7	8		அருங்கோல் சோ1
166	11	20		சவடிமுகப்1 மணி4
245	15	8		தொட்டுக்கம்பி சுரை 2
263	15	6		இ ச மின்னிசோ 1
303	17	10		இ கல் காதோலை சோடி 1
317	19	25		வெகல்பெண்டன்1
382	23	25		மிளது காப்பு 1
499	31	106		டைமனட்டியல் 1 கு இ
9-ம் மாசம்				
5[illegible]1	2	15		இ கல் பதக்கம் 1 டி இ மு வி
579	6	14		தங்கக்காப்பு 1
606	6	60	04	தாலிக்கொடி 1
612	8	6		ஒட்டுவளையல் 2 பூ இ வெ தண்டை சோடி 1
618	8	6	04	சிறுமோதிரம் 1
638	8	6	54	கல் செருகு தோடு சோடி 1
641	10	8		சிறுமோதிரம் 1 தூக்கம்
707	13	21		துடம் 3 இடைதூசி 4
748	17	10		தாலித்தட்டு 6 பூத்தட்டு 2 துடம் 1
755	17	75		டி முடிச்சுக்குத்தி அட்டியல் 1
797	19	50		து வை அரைப்பவுன் 1 கைச்சங்கிலி 2 க 1 இ
799	21	9		கலாவளைமோதிரம்1
805	21	8		இ கல் மோதிரம் 1
836	23	15		படக்கூர் 1 பதமணியட்டியல் கல் முத்துவிழு கறணைசோடி1
877	24	60		பத சங்கிலியட்டிய 1
890	26	20		மோதிரம் 1
910	26	9		வளையல் 4 பூ 1 இ
10-ம் மாசம்				
961	1	12		மோதிரம் 1
983	1	300		பூச்சங்கிலி மாலை 1 ஒப்பின்காப்புசோ1
998	3	16		வெ கல் காதோலை சோடி 1
1002	3	70		செயினட்டியல் 1 தங்கக்காப்பு சோ 1
1010	3	65		பிலிக்காப்பு சோ 1
1020	3	10		சிறுகைச் சங்கிலி 1 க இ
1042	5	7		கொப்புச் சிமிக்கி சோடி 1
1078	7	15		கலாவளை மோதிரம் 1
1109	9	10		இகல் வங்குத்திப் பூச்சி புறோச் 1
1123	11	10		வெ குழல் காப்பு சோடி 1
1170	15	17	04	வெ கல் காதோலை சோடி 1
1219	17	10		இ கல் காதுப்பூ சோடி 1
1237	19	48		ஒப்பின்காப்பு 1 மூட்டு இ
1276	21	35	04	பொகதாலிக்கொ1
1344	23	10		கற்றோடு சோடி 1
1361	25	100		சிகப்புக்கல் பத முடிச்சுக்குத்தி அட்டியல் 1 க 1 இ மு வி
1449	31	54		டி முடிச்சுக்குத்தி அட்டியல் 1
1464	31	15		தங்கக்காப்பு 1 பூ இ
11-ம் மாசம்				
1501	2	55		செயினட்டியல் 1
1563	4	17		தூக்கமுடன் கைச்சங்கிலி 1 க 1 இ
1608	8	15		வெ கல்மோதிரம்1
1642	9	15		வெள்ளித் தகட்டுடன் கூடு 1
1692	13	60	04	தாலிக்கொடி 1
1720	15	50	04	சங்கிலி 1
1740	15	23	04	மல்லிகைமொட்டுக்காப்பு 1
1811	21	15		சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி27
1830	21	10		வைரக்கல் மோதி1
1857	23	25		கொத்துக்கூடு 1
1912	27	10		சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி 16 அரும்புமணி11 உருண்டைமணி 1 பழுது
1954	30	12		இகல் காதோலை சோடி 1 க 1 இ
12-ம் மாசம்				
1978	2	25		கூடு கொப்பு சிமிக்கி சோடி 1
1992	4	24		பின் சவடியுடன் மணி 8
2004	4	9		மோதிரம் 1
2042	6	18		இ கல் காதோலை சோடி 1
2046	6	15		சிகப்புக்கல்காதோலை சோடி 1 க1இ
2063	6	10		வளையல் 6
2096	8	70	04	சங்கிலி 1
2115	10	18		சவுக்கமணி 1க்கு மணி 18 இகல் காதுப்பூ சோடி 1
2153	12	9	04	சிறுசிந்துபூ 1
2180	13	71		இகல்பத முடிச்சுக்குத்தி அட்டியல் 1
2196	14	55		3 பட்டு மணிக்கோர்வை 1 பலவித 2 பட்டு மணிக்கோர்வை 1 ஒ இ
2228	16	13		ஒட்டுவளையல் 6
2255	18	35	04	சவடி முகப்பு 2 உடன் பலவித மணி 23
2256	18	30		சம்புதாதவளைய 1
2314	22	75		இகல் டி கம்பிப் பூராணட்டியல் 1
2330	24	10		வெ கல் காதோலை சோடி 1
2338	24	6		ஒருகல் செருகுதோடு 1
2396	26	50		பொற்கடயம் 1
2406	26	17		மோதிரம் 1
2422	28	15		வெ கல் கடுக்கன் சோடி 1 க இ
2426	28	12		சவுக்கமணிக்கோர்வை 1க்கு மணி 16 ஒ இ
2459	30	82		வெ கல் பெண்டனுடன் 1 கண் வடமணட்டியல் 1
2463	30	57	54	தண்டுச்சங்கிலி 1
2465	30	17		தேனி மிளதுகாப் 1

விற்பனவு 1940-ம் ஆண்டு பங்குனி மாதம் 16-ந் திகதிக்குச் சரியான பிரமாதி வருடம் பங்குனி மாசம் 3-ந் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறநீங்கலாக மீதி மேற்படி கடையிற் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ந. பாலசுப்பிரமணியம்
ஏலத்தலைவர்
திரிகோணமலை
25-3-40
Mis 283 29-2-40 4-3-40

குயீன் பிறுண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை ——— நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறாத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, *(Sole Agent)*
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.

(Y. 49. 12-8-39—11-8-39.)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna or Thursday 29th February 1940.